வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 26.05.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 168 | பக்கங்கள் : 16




# தொல்லியல் திணைக்கள அளவீடுகளை வடக்கு - கிழக்கில் உடன் நிறுத்துங்கள்!

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உத்தரவு

கொழும்பு, மே 26

**வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த அளவீட்டு பணிகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்தி வைக்குமாறு புத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உரிய திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.**



தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் அரச தரப்பில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, அமைச்சின் செயலாளர், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்களின் பணிப்பாளர்கள் கொண்டனர்.

தமிழ் கட்சிகள் தரப்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சி. சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த. கலையரசன்,

15

## தையிட்டி திஸ்ஸ விகாரை நேற்று திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மே 26

தையிட்டியில் மக்களுக்கு சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரை எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த விகாரை அகற்றப்பட வேண்டும், அதன் அருகிலுள்ள மக்களுக்கு சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி செ. கஜேந்திரன்

15



## நெடுங்கேணி சிறுமி வன்புணர்வு; சிப்பாய்க்கு 15 வருட கடூழிய சிறை

### வவுனியா மேல் நீதிமன்று விதித்தது

வவுனியா, மே 26

சிறுமி ஒருவரை வன்புணர்ந்த குற்றத்துக்காக படை சிப்பாய் ஒருவருக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

கடந்த, 2013 மே 14ஆம் திகதி வவுனியா - நெடுங்கேணியில் 16 வயதுக்குட் பட்ட சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் முறைப்பாட்டின் அடிப்படையில் அந்தப்

15



## வவுனியா பாடசாலைகள் பொலிஸ் பாதுகாப்பின் கீழ்!

### குண்டுதாரிகள் நுழைந்தனரென பரவிய தகவலால்

வவுனியா, மே 26

வவுனியா நகர பாடசாலைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரில் மாணவர்களை இலக்கு வைத்து குண்டுதாரிகள் வந்துள்ளனர் என்று மகளிர் பாடசாலை ஒன்றுக்கு வழங்கப்பட்டதாக நேற்று பரவிய தகவலை அடுத்தே பொலிஸார் இந்த விடயத்தைத் தெரிவித்தனர்.

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையை ஆரம்பிக்க வசதியாக இன்றைய தினம் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்படுகின்றது. அத்துடன், எதிர்வரும் 29ஆம் திகதி

15

## ஜப்பானிடம் மன்னிப்பு கேட்டார் ஜனாதிபதி!

கொழும்பு, மே 26

ஜப்பான் அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டு வந்த கொழும்பு இலகு ரயில் திட்டம் இடைநிறுத்தப் பட்டமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் அரசாங்கத்திடம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

பெரும்திட்டங்களை வெளிநாட்டின் தலையீட்டில் அல்லது கட்சியின் தலையீட்டில் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின்றி நிறுத்தவோ அல்லது இரத்து செய்யவோ முடியாத வகையில் எதிர்காலத்தில் பாராளுமன்றம்

15

இலங்கை - இந்திய மீனவர் விவகாரம்

## இரு தரப்பு பேச்சுக்கு மீளவும் முயற்சிகள்!

கொழும்பு, மே 26

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை விடயத்தில் மீளவும் பேச்சுகள் ஆரம்பிக்கச் செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவை தமிழ்நாடு அரச சார்பற்ற நிறுவனத்தின் மீன்பிடி முகாமைத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் விவேகானந்தன் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கடற்றொழில்

15

## தையிட்டி போராட்டம் நிறைவு

யாழ்ப்பாணம், மே 26

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையை அகற்றக் கோரி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை இரவு-07 மணியுடன் தற்காலிகமாக நிறைவுக்கு வந்தது.

தமிழர் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்ற வேண்டும், அருகிலுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில்

15

## தமிழரின் உரிமைகளை அரசாங்கம் மறுக்கிறது

### கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, மே 26

தமிழர்களின் உரிமையை மறுக்கும் வகையில் அரசாங்கம் செயல்படுகிறது. அத்துடன், எதிர்த்து குரல் கொடுக்கும் மக்களை பிரச்னைகளுக்கான மூல காரணமாக அரசாங்கம் அடையாளப்படுத்துகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

15

## 37 கிராமங்களை முல்லைத்தீவு, மன்னாரில் ஆக்கிரமிக்க முயற்சி

### பாராளுமன்றில் தெரிவித்தார் சார்ள்ஸ் எம். பி.

கொழும்பு, மே 26

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் 37 கிராமங்களை மகாவலி வலயத்துக்குள் உள்வாங்குவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன - என்று பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.

மகாவலி அதிகார சபையால் தமிழர்களின் பூர்விக நிலங்கள் பறிக்கப்பட்டு அது தென்பகுதி மக்களுக்கு வழங்கப்படுகிறன என்றும் அவர் இதன்போது குற்றஞ்சாட்டினார். தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து உருவாக்கப்பட்ட பகுதிகளில் புதிய பிரதேச செயலகம் ஒன் றும் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## வவுனியா...

சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகின்றது இந்த நிலையிலேயே இவ்வாறான தகவல் நேற்று வவுனியாவில் பரவி அச்சத்தை ஏற்படுத்தியது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நகரப் பகுதிக்குள் மாணவர்களை இலக்குவைத்து குண்டுதாரிகள் வந்துள்ளனர். மாணவர்களை வெளியில் திரிய விட வேண்டாம் என்று தம்மை பொலிஸார் என்று இனங்காட்டிய இருவர் வவுனியாவின் பிரபல மகளிர் பாடசாலை ஒன்றின் காவலாளியிடம் கூறிவிட்டு சென்றனர். இதை அவர் உடனடியாக பாடசாலை அதிபருக்கு தெரியப் படுத்தியுள்ளார். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

எனினும், இந்தத் தகவல் குறித்து பாடசாலையின் அதிபர், தமக்கு உத்தியோகபூர்வ தகவல் எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்றைய தினம் அந்த மகளிர் பாடசாலைக்கும் வவுனியா நகரில் உள்ள பாடசாலைகளுக்கும் இரு பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், அவசியமான சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன - என்றும் அறிய வருகின்றது.

## தொல்லியல்...

ஈ. பி. டி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் சிறீதரன் எம். பி, வடக்கு, கிழக்கில் அண்மைக்காலங்களில் இந்து ஆலயங்கள் பௌத்த மயமாக்கப்படுவது குறித்து தாம் திரட்டிய தகவல்கள் கொண்ட அறிக்கையை அமைச்சரிடம் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து நடந்த பேச்சில், நாட்டில் சிங்கள - பௌத்தத்துக்கு முன்னதாக தமிழ் - பௌத்தம் நிலவியதை சுட்டிக்காட்டிய தமிழ் எம். பிக்கள், வடக்கு - கிழக்கில் பௌத்த சின்னங்கள் பாதுகாக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், சைவ வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டு, பௌத்த வழிபாட்டிடங்கள் அமைக்கப்படுவதை எதிர்க்கிறோம் - என்றனர்.

உருத்திரபுரம் சிவன் கோயில், குருந்தூர் மலை, தையிட்டி விவகாரங்களை அவர்கள் சுட்டிக்காட்டினர். குருந்தூர் மலையில் நீதிமன்ற தீர்ப்பை மீறியும் தையிட்டியில் பொதுமக்களின் காணிக்குள்ளும் விகாரை கட்டப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியபோது, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் சில விளக்கங்களை அளித்தார்.

குருந்தூர் மலையில் முன்னர் விகாரை இருந்ததாகவும், வெளிநாட்டு சிங்கள அமைப்புக்களின் நிதி உதவியிலேயே விகாரை அமைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு தமிழ் தரப்பினர், வெளிநாட்டிலுள்ள தமிழ் தரப்பிலிருந்து நிதி திரட்டி தந்தால், பொலநறுவையில் மிகப்பெரிய சைவக் கோயில் கட்ட முடியுமா என கேள்வியெழுப்பினர்.

தமிழ் தரப்பினர் தொல்லியல் முக்கியத்துவமுள்ள பகுதிகளை அபகரிக்க முயல்கின்றனர் என்றும் அதனாலேயே நில அளவீடு செய்வதாகவும் தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆலய காணிகளை தமிழ் மக்கள் அபகரிப்பதில்லை என்று தமிழ் தரப்பினர் இதன்போது கூறினர்.

தமிழ் தரப்பினர் தெரிவித்த விடயங்களுக்கு தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நீண்ட விளக்கங்கள் அளிக்க முற்பட்டபோது, “கேட்ட கேள்விக்கு மட்டும் பதிலளியுங்கள்”, என அமைச்சர் கூறினார்.

இதைத் தொடர்ந்து, உருத்திரபுரம் சிவன் ஆலயம் உள்ளிட்ட வடக்கு - கிழக்கிலுள்ள சைவ ஆலயங்கள், வழிபாட்டிடங்களில் அளவீட்டு பணிகளை உடனடியாக நிறுத்த அமைச்சர் உத்தரவிட்டார்.

குருந்தூர் மலைக்கு நீதிவான் சென்று பார்வையிட்ட பின்னர் கூடித் தீர்மானம் எடுப்பது என்றும் இதன்போது முடிவு எட்டப்பட்டது. (ஐ)

## ஜப்பானிடம்...

சட்டங்களை இயற்றும். அனைத்து பெரியளவிலான திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் திட்டத்தின் வருடாந்திர அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும் - என்றும் இதன்போது தெரிவித்தார்.

ஜப்பானுக்கு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்படி விடயங்களை தெரிவித்தார்.

ஜப்பான் முன்னெடுத்த இலகு ரயில் திட்டம் கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் தன்னிச்சையாக நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தையிட்டி...

கடந்த திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் மீண்டும் குறித்த விகாரைக்கு அருகில் கவனவீர்ப்பு போராட்டம் ஆரம்பமானது.

இரவு - பகலாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை நான்காவது நாளாகவும் கவனவீர்ப்பு போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று அதிகாலை விகாரை திறந்து வைக்கப்பட்டது. விகாரை திறப்பு விழாவுக்கு இராணுவத்தினர், வெளிமாவட்டங்களில் இருந்து மக்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். ஆனால், அங்கு நின்ற செய்தியாளர்களுக்கு அனுமதி வழங் கப்பட்டிருக்கவில்லை.

எதிர்ப்புகளை மீறி விகாரை திறந்து வைக்கப்பட்ட நிலையில் போராட்டம் தற்காலிகமாக நிறைவுக்கு வருவதாக கஜேந்திரன் எம். பி. அறிவித்தார்.

## நெடுங்கேணி...

பகுதி இராணுவ முகாமில் பணி யாற்றிய இராமச்சந்திர ஆரியரட்ண என்ற சிப்பாய் கைது செய்யப்பட்டார். அவர் கடமையிலிருந்தபோது சம்பவம் இடம்பெற்றது என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்தது.

சந்தேக நபருக்கு எதிராக வவுனியா நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணை இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து எதிரிக்கு எதிராக சட்ட மா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று நேற்றைய தினம் தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது.

நேற்றைய விசாரணை முடிவில், “சிவில், பொலிஸ் சாட்சியங்கள் மற்றும் நிபுணத்துவ சாட்சியங்களின் அடிப்படையில் வழக்குத் தொடுநர் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபித்துள்ளார். இரண்டு குற்றச்சாட்டுகளில் எதிரி குற்றவாளியாக இனங்காணப்பட்டார்”, என்று மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

“சிறுமியை பாதுகாவலரின் பாதுகாப்பிலிருந்து கவர்ந்து அழைத்துச் சென்றார் என்று எதிரிமீதான முதலாவது குற்றச்சாட்டுக்கு 7 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது.

பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற எதிரி மீதான இரண்டாவது குற்றச்சாட்டுக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீட்டை எதிரி வழங்க வேண்டும் என்பதுடன், 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவேண்டும். செலுத்தத் தவறின் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும்” என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். (ஐ)

# நெருக்கடி நாடுகள் இலங்கைக்கு 11ஆவது இடம்!

நியூயோர்க், மே 26

உலகில் அதிக பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள மக்கள் வாழும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 11ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட் டுள்ளது.

157 நாடுகளை உள்ளடக்கிய வகையில் இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு, புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் ஸ்ரீவ் எச். ஹேங் வெளியிட்ட வருடாந்த அறிக்கையிலேயே இந்த தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு , வேலைவாய்ப்பின்மை ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த தரப்படுத்தல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்தமையே இலங்கை இந்தப் பட்டியலில் இடம் பெற முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரம், சிம்பாப்வே உலகிலேயே பொருளாதார ரீதியாக மிகவும் நெருக்கடியான நாடாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

வெனிசுவேலா, சிரியா ஆகிய நாடுகள் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களில் உள்ளன. இந்த பட்டியலுக்காக 157 நாடுகள் தொடர்பில் ஆய்வுகள் இடம்பெற்றிருந்தன.

## தமிழரின்...

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரான அவர்,

“யாழ்ப்பாணம் - தையிட்டியில் சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்ட விகாரையை பாதுகாப்பதற்கான உத்தரவை வடக்கிலுள்ள பொலிஸார் நீதிமன்றத்திடம் பெற்றுள்ளனர்.

இந்த விகாரை கட்டப்பட்ட காணி உரிமையாளர்களின் உரிமைகள் மீறப்பட் டுள்ளன. இந்த சட்டவிரோத செயலை எதிர்த்து போராடிய எமது மக்களையும் கட்சி உறுப்பினர்களையும் பொலிஸார் தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்தி, இது தொடர்பான முறையான விசாரணைகளை முன்னெடுக்க உத்தரவிட வேண்டும். இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் சார்பான உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட தவறான விடயங்களுக்கு எதிரான விசாரணைகள்மீது நம்பிக்கை வைக்குமாறு தமிழ் மக்களிடம் கேட்கின்றனர். இது ஓர் அவமானமான செயல்.

இந்த நிலையில், நாட்டில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் அதிகமாக காணப்பட்ட இனங்களுக்கு இடையிலான மோசமான உறவுகளே தற்போதைய நெருக்கடிக்கு காரணமென அரசாங்க தரப்பில் உரை யாற்றிய தென்னகோன் தெரிவித்தி ருந்தார். இதற்கான அடிப்படை என்ன? எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மை இருக்கும் அரசாங்கத்தின் அதிகாரத்தை பயன்படுத்தி இந்த நாட்டின் பிரஜைகளான ஏனையவர்களின் உரிமைகளை முற்றுமுழுதாக மீறியுள்ளனர்.

இலங்கையில் கடந்த 75 வருடங்களாக நடந்த தவறுகளை மீண்டும் செய்ய வேண் டுமா என பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். எனினும், அதுவே தற்போது நடைபெறுகிறது. கடந்த காலங்களில் நடைபெற்ற விடயங்கள் மூலம் யாரும் எதனையும் கற்றுக் கொள்ளவில்லை. இதனடிப்படையில், இலங்கை ஒரு போதும் தனது காலில் நிற்காது. இதே முறைமையை அடுத்த 75 ஆண்டுகளுக்கும் அரசாங்கம் முன்னெடுக்கும் - என்றார். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் டலஸ் அணி

கொழும்பு, மே 26

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை அடிப்படையாக வைத்து பல கட்சிகள் தங்களைப் பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் ஒன்றான சுதந்திர மக்கள் சபை சர்வதேச மட்டத்தில் கட்சியை விரிவுபடுத்தும் வேலையில் இப்போது இறங்கியுள்ளது.

அண்மையில் பிரிட்டன் சென்று வந்த சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெரும நெதர்லாந்து, இத்தாலி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அங்குள்ள பல கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

அந்தக் கட்சிகளுடன் இணைந்து அரசியல் செய்வதுதான் டலஸ் கட்சியின் திட்டம் என்றும் தெரிய வருகின்றது. வெளிநாட்டுக் கட்சிகளின் அனுபவம் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து கட்சியைப் பலப்படுத்துவதுதான் டலஸ் கட்சியின் நோக்கமாக உள்ளது என்றும் அறிய முடிகின்றது.

## தையிட்டி திஸ்ஸ...

எம். பி. தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையிலேயே இந்த விகாரை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அதிகாலை 5.30 மணியளவில் இந்த விகாரை சிறப்பு நிகழ்வுகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் இராணுவத்தினருடன் வெளி மாவட்டத்தில் இருந்து அழைத்து வரப்பட்ட பெரும்பான்மை இனத்தவர்களும் பங்கேற்றனர் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## இரு தரப்பு...

அமைச்சரின் பணிமனையில் நடந்த இந்தப் பேச்சு தொடர்பில் அவரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில்,

நாட்டின் கடல்பரப்பில் வளங்களை அழிக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் அனுமதிக்கப் போவதில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், நாட்டின் கடல் பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி - எல்லை தாண்டி - சட்டவிரோத தொழில் முறைமையை தடுத்து நிறுத்த பல சந்தர்ப்பங்களில் பேச்சுகளை நடத்திய போதெல்லாம் தமிழ்நாட்டு மீனவர்கள் கால அவகாசம் கேட்டே காலத்தை கடத்தினார்கள்.

சுமார் 15 வருடங்கள் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளன. ஆனாலும் தொடர்ந்தும் அத்துமீறல்களும் வள அழிப்பும் தொடர்வதால் எமது கடல் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்று அமைச்சர் கூறினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட விவேகானந்தன்,

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது தவறு என்பதை துணிந்து சொல்லும் தைரியம் தமிழ்நாட்டில் எவருக்கும் இல்லை. இந்த விவகாரத்தில் நியாயமான தீர்வைக் காண்பதற்கு நாமும் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கைக்கும் கச்சதீவு விவகாரத்துக்கும் தொடர்பில்லை. சில தரப்புகள் அரசியலுக்காக இந்த இரு விடயங்களையும் தொடர்புபடுத்தி பேசுகின்றனர்.

எனவே, அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக இரு தரப்பிலும் கலந்துரையாடி நியாயமான தீர்வுக்கு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். இரு தரப்பினரும் மீண்டும் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும் - என்று கூறினார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அந்தப் பதவியில் இருந்து பாராளுமன்றத்தால் நீக்கப்பட்டிருக்கின்றார்.

மின்சார கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராக அவர் குரல் கொடுத்ததால் அவருக்கும் துறைசார்ந்த அமைச்சருக்கும் இடையே மோதல் உருவாகியதும் அது நாளடைவில் பெரிதாகி இன்று அவரை பாராளுமன்றத்தின் உதவியுடன் வெளியேற்ற வேண்டி வந்ததும் துரதிர்ஷ்டமானதுதான்.

மின்சார கட்டணத்தை அதிகரிக்க அமைச்சர் (அரசுதான்) நடவடிக்கை எடுத்தபோது அதற்கு எதிராக அவர் குரல்கொடுத்தார். அப்போது, அவர் சாதாரண மக்களின் குரலாக ஒலிக்கிறார் என்றே இந்த ‘ஊர்க்குருவி’யும் நம்பியதுண்டு.

விலை அதிகரிப்புக்கு முன்னதாகவே மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டபோதும் அமைச்சரின் முடிவுடன் அவர் அடிக்கடி முரண்பட்டதையும் முன்னர் காணமுடிந்தது.

பின்னர், சாதாரண தர பரீட்சை நடைபெற்ற காலத்தில் சில மணி நேர மின்வெட்டை மின்சார சபை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டபோது, பரீட்சை நடைபெறும்போது மின் துண்டிப்பை செய்யக்கூடாது என்று அவர் உத்தரவு போட்டபோது அதனை மின்சார சபை கண்டுகொள்ளவில்லை. அவர் கடைசியாக மனித உரிமைகள் ஆணையம், நீதிமன்றம் என்று ஏறி இறங்கியபோது அவரை எல்லோரும் ‘ஹீரோ’வாகவே பார்த்தனர்.

ஆனால், இந்த ஊர்க்குருவியிடம் அப்போது ஒரு கேள்வி இருந்தது. பரீட்சை நேரத்தில் மூன்று மணி நேரம் மின் தடை வருவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்ற வாதம் சரியானதுதானா? இரண்டு ஆண்டுகள் பரீட்சைக்காகக் கல்வி கற்று, பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பரீட்சை நடக்கும் அந்த நாட்களில்தானா கல்வி கற்கின்றனர். அதுவும் மூன்று மணி நேரம்? பரீட்சை நடைபெறும் காலத்தில் ஒரு மூன்று மணி நேரம் மாணவர்கள் ஓய்வு எடுக்காமல்தான் படிக்கின்றனரா என்று மனதில் எழுந்த கேள்வியை தவிர்க்க முடியவில்லை.

அதனால்தானோ என்னவோ பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு தலைவரின் அந்த கோரிக்கைக்கு ஆதரவாக பெருமளவான ஒரு மக்கள் கோரிக்கை - அல்லது அவரின் கோரிக்கைக்கு ஆதரவான நிலைமை நாட்டில் ஏற்படவில்லை.

பின்னர், அவர் கட்டண அதிகரிப்புக்கு எதிராக குரல் கொடுத்தபோதும் மக்கள் தமக்காக அவர் குரல் கொடுக்கிறார் என்று நம்பியிருந்தால் அவரோடு நின்றிருப்பார்களோ தெரியவில்லை.

தனி ஒருவராக அவர் போராடியபோது, அவரின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை சரியானது என்று மக்கள் நம்பியிருந்தால் - எதிர்க்கட்சிகளும் அதற்கு ஆதரவாக - அதாவது அவருக்கு ஆதரவாக அப்போதே நின்றிருக்க வேண்டாமா?

இவற்றைப் பார்க்கின்றபோது தையிட்டியில் நமது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் புத்த விகாரயை அகற்றுமாறு கோரி மீண்டும் போராட்டம் நடத்துவதுதான் ஞாபகத்துக்கு வந்தது.

தனியார் காணியை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்பட்டதை தமிழர் தரப்புகள் மாத்திரமல்ல, நயினாதீவு நாக விகாரையின் விகாராதிபதியும்தான் கண்டித்திருந்தார். தனியார் காணியை களவெடுத்தே தையிட்டியில் விகாரை கட்டப்பட்டதாக நாக விகாராதிபதி தெரிவித்திருந்தார்.

ஆனால், அது களவெடுக்கப்பட்டபோதே அதன் காணி உரிமையாளருக்கு பிரதேச சபை தகவலை வழங்கி அதனைத் தடுப்பதற்கு சட்ட ரீதியாக நீதிமன்றத்தை நாடுவதற்கு முயன்றதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆக, காணி உரிமையாளர்கள் அது விடயத்தில் உரிய முறையில் அணுகியிருந்தால் விகாரை கட்டப்படுவதைத் தடுத்திருக்கலாம். அதாவது அந்தக் காணியில் கட்டப்படுவதைத் தடுத்திருக்கலாம்.

தையிட்டியில் ஏற்கனவே விகாரை இருந்த இடத்தில் - விகாரைக்கு சொந்தமான காணியில் - அந்த விகாரை கட்டப்பட்டிருந்தால், அதற்கு எதிராக இன்று யாரும் போராட்டம் நடத்தியிருக்க மாட்டார்கள்.

இப்போது, தனியார் காணியை அபகரித்து கட்டப்பட்ட விகாரையை அகற்றக்கோரி முன்னணியினர் போராட்டம் நடத்துகின்றபோது, ஆகக்குறைந்தது அந்தக் காணியின் உரிமையாளரோ அல்லது பக்கத்து காணிகளின் உரிமையாளர்களோகூட அந்தப் போராட்ட களத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது. மக்களுக்காக போராட்டம் நடத்திய ஜனக ரத்நாயக்கா இன்று பதவியையும் இழந்து நிற்கின்றபோதும் அவரோடு மக்கள் நிற்பதாகத் தெரியவில்லை.

ஆனால், அவரோ தனக்கு கிடைத்த இந்த அறிமுகத்தை வைத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார்.

இந்த நாட்டில் ஒரு பிரஜை, அதிகம் ஏன் இந்த ஊர்க்குருவிகூட கட்டுப்பணத்தை செலுத்த யாராவது உதவினால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம்.

ஆனால், ஜனக ரத்நாயக்க இப்போது தான் போட்டியிடப் போகிறார் என்று சவால் விடுப்பதை பார்க்கின்றபோது, அதற்காகவே - அவர் பிரபல்யத்தை தேடுவதற்காக இப்படி முரண்டு பிடித்தாரோ என்று எண்ணுவதைத் தவிர்க்க முடியவில்லை.

நாட்டின் தலைவராக அரசியலில் வருவதற்கு யாரும் விருப்பம் கொள்வது தவறில்லைத்தான். ஆனால், அரசியல் என்பது வெறுமனே நேர்மை சம்பந்தப்பட்டதல்ல. அல்லது திறமை சம்பந்தப்பட்டதல்ல.

ஏற்கனவே இந்த நாடு அரசியல் அனுபவமில்லாத ஒருவரிடம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு அல்லோலகல்லோலப்பட்டதை மறந்துவிட மக்கள் ஒன்றும் ... அல்ல.

இது ஜனகவுக்கு மாத்திரமல்ல அனைவருக்கும் பொருத்தமானது.

**- ஊர்க்குருவி**

# புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு

*யாழ்ப்பாணம்,மே26*

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி ‘நூறு மலர்கள் மலரட்டும்’ என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 11 ஆவது நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து மூன்று தினங்கள் இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பிரதான மண்டபத்தில் நடக்கும் இந் நிகழ்வில், இரண்டாவது நாளான நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு மணிக்கு இடம்பெறறவுள்ள ஈழத்து நூல்களை அறிவோம் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் எழுத்தாளர் கே. எஸ். ஆனந்தன் நினைவு அரங்கில், தேசிய கலை இலக்கியப் பேரவைத் தலைவர் க. தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் அறிமுக உரைகள் வரிசையில் கே.டானியலின் “சாநிழல்” நாவல் தொடர்பாக ஓய்வுநிலைக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன், ஆதிலட்சுமி சிவகுமாரின் “பொன் வண்டு” நூல் தொடர்பாக சமூக செயல்பாட்டாளர் பூரணி பரராஜசிங்கம், பிரிந்தா குலசிங்கத்தின் “கலானிய ஊர்காவற்றுரையின் கட்டடக்கலை” என்ற நூல் பற்றி கட்டட கலைஞரான இ. மயூரநாதன், அழ. பகீரதனின் “ஐப்பசியில்” கவிதைத் தொகுப்புத் தொடர்பாக எழுத்தாளர் க. சிவகரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். நிகழ்வை மாணவி றஜிகுமார் சுலக்சனா தொகுத்து வழங்குவார்.

தொடர்ந்து மாலை 6 மணியளவில் சண் நாடகக் குழுவின் தயாரிப்பில் பு. கணேசராசாவின் நெறியாள்கையில் “காதலுக்கு மருந்து”, “என்னவென்று சொல்வேனடி?” ஆகிய நாடகங்கள் அரங்கேறவுள்ளன. ஆர்வலர்கள் அனைவரையும் இந் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுள்ளனர். (ஐ)

# சேவை செய்து நிதி சேர்க்கும் யாழ். பல்கலை. மாணவர்கள்!

*யாழ்ப்பாணம், மே 26*

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிபீட மாணவர் ஒன்றியத்தால் முகாமைத்துவ மற்றும் வணிக வாரத்தை முன்னிட்டு சமூகத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் முகமாக நிதி திரட்டும் செயல்திட்டம் நேற்று 9 மணி முதல் யாழ். பல்கலைக்கழக முன்றலில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.



கார் மற்றும் மோட்டார் வாகனங்களை சுத்திகரிப்பு செய்து இவ்வாறு மாணவர்களால் நிதி சேகரிக்கப்படுகின்றது. இந்த செயல்திட்டத்துக்கு ஆதரவு வழங்குவோருக்கு மாணவர்களால் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

மக்கள் பங்களிப்புடன் மாணவர்களால் திரட்டப்பட்ட நிதி சமூகத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதில், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர் ஒன்றிய தலைவர் த. மீராஜா, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட பீடாதிபதி நிமலதாசன், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# குருந்தூர்மலை வழக்கு ஒத்திவைப்பு

*முல்லைத்தீவு, மே 26*

குருந்தூர்மலையில் தொல்லியல் திணைக்களத்தின் செயல்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு மீண்டும் ஒக்ரோபர் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம்.

கடந்த ஆண்டு ஜூன் 12ஆம் திகதி குருந்தூர்மலை ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டம் தமது கடமைகளுக்கு இடையூறாக இருந்ததாக தெரிவித்து தொல்பொருள் திணைக்களம் வழக்கு தொடர்ந்தது.

அத்துடன், இடையூறு ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் முன்னாள் தலைவர் இ. மயூரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. முடிவில் எதிர்வரும் ஒக்ரோபர் 19ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)





நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) வருடாந்த பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.
(படங்கள்: ஐ. சிவசாந்தன்)

Eelanadu
26.05.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நகைச்சுவையாகின்றதா தமிழர் அரசியல்?

ஒரு குறிப்பிட்ட சூழலில் ஆக்கிரமிப்பு நிகழ்வதாக உணரும் போது பாதிக்கப்பட்ட மக்கள் ஜனநாயக வழியில் தங்களின் எதிர்ப்பைக் காண்பிப்பர். இது ஓர் உலகம் தழுவிய ஜனநாயக ஒழுங்கு. உலகெங்கும் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புப் பேரணிகளும் நடைபெற்றிருக்கின்றன - நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவுகள் எதிர்பார்த்தவாறான விளைவுகளைத் தராவிட்டாலும்கூட, இவ்வாறான எதிர்ப்புகள் ஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றது என்பதைக் காண்பிப்பதற்கான ஓர் அளவுகோலாகவே நோக்கப்படுகின்றது. உதாரணமாக ஈராக் மீதான யுத்தத்தை எதிர்த்து அமெரிக்க வீதிகளில் இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் திரண்டனர். யுத்தத்தை நிறுத்துமாறு கூறினர். ஆனால், யுத்தத்தை நிறுத்த முடிந்ததா - இல்லை - ஏனெனில், அதிகார சக்திகளின் நகர்வுகளுக்கு எதிராக சிலர் வீதிகளில் கூடுவதால் மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது.

ஆனால், நாடு தழுவிய ரீதியில் ஆட்சியாளர்களுக்கு எதிராக பல இலட்சக்கணக்கான மக்கள் திரளும்போது, அதற்கு செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்காக ஆட்சியாளர்கள் தங்களின் நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இதற்கு தென்னிலங்கையில் இடம்பெற்ற சிங்கள 'அறகலய' ஓர் அண்மைய உதாரணமாகும். ஆனால், தமிழ் சூழலைப் பொறுத்தவரையில் அண்மைக்காலத்தில் ஆங்காங்கே போராட்டங்கள் என்னும் பெயரில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - அவற்றில் பெரும்பாலும் குறித்த கட்சிகளை சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகளும் கட்சியின் ஆதரவாளர்கள் சிலருமே பங்குகொள்கின்றனர்.

தற்போது தையிட்டி விகாரையை அகற்றுமாறுகூறி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சில எண்ணிக்கையான கட்சியின் ஆதரவாளர்களும் போராட்டம் என்னும் பெயரில் அங்கு கூடியிருக்கின்றனர். ஆனால், யாழ்ப்பாணத்திலுள்ள சாதாரண மக்களோ அதனைத் திரும்பியும் பார்க்கவில்லை. ஒன்றில் அந்தக் கட்சியை மக்கள் நம்பவில்லை அல்லது குறித்த நடவடிக்கை பொருத்தமற்ற ஒன்றென்று அவர்கள் கருதுகின்றனர். அல்லது மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய அரசியல் சூழலை ஏற்படுத்தக்கூடிய வல்லமையை தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் முற்றிலுமாக இழந்து விட்டன. இவற்றில், ஒன்றே மக்கள் இதனை பொருட்படுத்தாமைக்கான காரணமாகும்.

உண்மையில், தையிட்டி விகாரை பல வருடங்களாகக் கட்டப்பட்டு தற்போது வழிபாடுகளுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. குறித்த விகாரை இலங்கையில் இதுவரையில் நிறுவப்பட்ட விகாரைகளில் இரண்டாவது நிலையில் உயரம் கூடியதாக நோக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு விகாரை நிர்மாணிக்கப்படும் வரையில் எவருமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மக்களும் விகாரையின் கட்டுமானத்தைப் பார்த்தவாறே பல வருடங்களாக அந்த வழியால் சென்று கொண்டிருந்தனர். ஆனால், எல்லாம் முடிவுற்றவுடன் தற்போது போராட்டமென்று காங்கிரஸ் கூறுகின்றது. போராட வருமாறு மக்களை அழைக்கின்றது. ஆனால், மக்களோ இவ்வாறான நடவடிக்கைகள் எவற்றையும் பெரிதுபடுத்துவதாகத் தெரியவில்லை. இவ்வாறான நடவடிக்கைகளை எவ்வாறு வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதென்று கட்சிகள் சிந்திக்க வேண்டும் - இல்லாவிட்டால், போராட்டம் என்னும் சுலோகத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இவ்வாறான விடயங்கள் தமிழர் அரசியலை நகைச்சுவைக்கு உரியதாக்கிவிடலாம்.

*ஆசிரியரை மாணவன் தாக்கிய விவகாரம்:*

## ஆளுநரிடம் இடமாற்றம் கோரி ஆசிரியர்கள் கடிதம் அனுப்பினர்!

*யாழ்ப்பாணம், மே 2*

யாழ்ப்பாணம் புறநகர பகுதியில் இயங்கும் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் ஆசிரியர்கள் தம்மை இடமாற்றம் செய்யுமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸூக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கல்லூரியில் நேற்று முன்தினம் பயிற்சி ஆசிரியர் ஒருவரை மாணவன் ஒருவர் தாக்கினார் என்று கூறப்படுகின்து. முன்னதாக அந்த மாணவனின் தந்தையும் ஆசிரியர் ஒருவரை தாக்கியிருந்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே, அந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி கடிதம் எழுதியுள்ளனர்.

அதில், குறித்த கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாகிய நாம் தினம் தினம் இந்தப் பாடசாலையில் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

24.05.2023 அன்று யாழ்ப்பாண தேசியக் கல்வியல் கல்லூரியால் பயிற்சிக்காக வந்த ஆசிரியர் மீது தரம் 11 மாணவர்கள் தாக்குதலை நடத்தியுள்ளனர் . இது இரண்டாவது சம்பவமாகும். இவ்வாறு தொடர்ந்து ஆசிரியர்கள்மீது தாக்குதல்கள் இடம்பெறுவதனால் இப் பாடசாலையில் கடமையாற்றுவது அச்சுறுத்தலாகவே உள்ளது.

எனவே, எமக்கு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறு இடமாற்றம் பெற்றுத் தராவிடின், உடல் ரீதியாக பாதிக்கப்படும் பட்சத்தில் நீங்களே பொறுப்புக் கூறுபவர்களாக கருதப் படுவீர்கள் - என்றுள்ளது.

அத்துடன், இந்தக் கடிதத்தின் பிரதியை மனித உரிமை ஆணைக்குழு, இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றுக்கும் அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர். (ஐ)

*பாராளுமன்ற செயலருக்கு பாராட்டு:*

## தமிழ், முஸ்லிம் கட்சிகளின் எம். பிக்கள் பங்கேற்கவில்லை!

*கொழும்பு, மே 26*

ஓய்வு பெற்றுச் செல்லும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவுக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணையில் தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகள் பங்கேற்கவில்லை.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க ஓய்வு பெற்று செல்கிறார். அவருக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணை நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணி முதல் ஒரு மணிவரை இடம்பெற்றது.

இதன்போது சபைக்குள் இருந்த பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மேசைகளில் தட்டி அவருக்கு வரவேற்பளித்தனர். எனினும், செயலாளர் சபைக்குள் வருவதற்கு முன்னர் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ஆசனத்தில் இருந்து எழுந்து வெளியே சென்று விட்டார்.

சபைக்குள் அழைத்துவரப்பட்ட தம்மிக தசநாயக்க தனது பாராளுமன்ற செயலாளர் நாயகருக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார். அவரின் குடும்பத்தினர் உறவினர்கள் சபாநாயகர் கலரியில் அமர்ந்திருந்தனர்.

ஓய்வு பெற்றுச் செல்லும் பாராளுமன்ற செயலாளருக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்து ஆரம்பித்து வைத்தார்.

இதனைத்தொடர்ந்து எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதமர், அமைச்சர்கள், எம்.பிக்கள் என பலரும் உரையாற்றினார்கள். நீண்ட நேரத்தின் பின்னர் எதிர்க்கட்சி தலைவரும் சபைக்கு வந்து பிரேரணையில் உரையாற்றினார்.

எனினும், இந்தப் பிரேரணையில் தமிழ் , முஸ்லிம். மலையக கட்சிகளைச் சேர்ந்த எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

*கொழும்பு, மே 26*

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் 2022 (2023) பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

எந்தக் காரணம் கொண்டும் அதிபர்கள் உரிய பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தை பரீட்சார்த்திகளுக்கு வழங்காதிருக்கக்கூடாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் கிடைக்காத காரணத்தால் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனால் அதற்கான முழுப் பொறுப்பையும் அதிபரே ஏற்க வேண்டும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் எச். ஜே. எம். சி அமித் ஜயசுந்தர தெரிவித்தார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மே - 26 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - வைகாசி 12**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | சப்தமி |




**மேடம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.வியாபாரத்தில் பற்று வரவு அதிகரிக்கும். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிவரும். வாகனத்தில் கவனம் தேவை. லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். அதிக லாபம் ஈட்டுவீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். உற்சாகமான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் பல வேலைகள் தடைப்பட்டு முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுமை தேவைப்படும்.

**மகரம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். கனவு நனவாகும்.

# தமிழே உலகின் தொன்மை மொழி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி

புதுடில்லி, மே 26

தமிழ் மொழிதான் இந்த உலகின் தொன்மையான மொழி. அது ஒவ்வோர் இந்தியரின் மொழி என்று கூறியுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

மூன்று நாடுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று காலை இந்தியா திரும்பியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

ஜப்பான் பப்புவா நியூ கினி மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணங்களை முடித்துக் கொண்டு நேற்று திரும்பிய அவர், "நான் வெளிநாடுகளில் நம் தேசத்தின் கலாச்சாரம் பற்றிப் பேசும்போது இந்த உலகின் கண்களை உற்று நோக்குகிறேன். இந்த நம்பிக்கை எனக்கு வரக் காரணம் இங்கே அமைந்துள்ள பெரும்பான்மை பலம் மிக்க ஆட்சி. இந்த உலகம் இப்போதெல்லாம் இந்தியா என்ன சிந்திக்கிறது என்பதை அறிய ஆர்வமுடன் இருக்கிறது.

தடுப்பூசியை உலக நாடுகளுக்கு அளித்தது பற்றி வெளிநாட்டில் எனக்கு கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது, நான் அவர்களிடம் இது புத்தரின் மண். நாங்கள் எதிரிகளையும் அக்கறையுடன் நடத்துவோம்- என்றேன்.

தமிழ் மொழி நம் மொழி. அது ஒவ்வோர் இந்தியரின் மொழி. உலகின் தொன்மையான மொழி தமிழ் மொழி. அந்த மொழி தந்த திருக்குறளை பப்புவா நியூ கினி நாட்டில் டோக் பிசின் மொழியில் மொழிபெயர்த்துள்ளனர். அதை வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அது எனக்கு மகிழ்ச்சி அளித்தது" என்றார்.

(ஐ)

# ஜெயலலிதா பாணியில் தொடர் போராட்டங்கள்!

**அ. தி. மு. க. கட்சி திட்டம்**

சென்னை, மே 26

ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் அ. தி. மு. க. பல அணிகளானது. பின்னர், எடப்பாட பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம் என இரட்டை தலைமையின் கீழ் செயல்பட்டது. தற்போது, பழனிசாமி அ. தி. மு. கவின் தலைவராகியுள்ளார்.

அ. தி. மு. க. கட்சியை மேலும் வலுவாகக் கட்டமைக்க பழனிசாமி தீவிர கவனம் செலுத்தி வருகின்றார். இதேநேரம், தமிழ்நாட்டை ஆளும் தி. மு. கவுக்கு எதிராக போராட்டங்களையும் நடத்தி வருகின்றார்.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசை கண்டித்து அடுத்தடுத்து பா. ஜ. கட்சியினர் அதிக போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இது அ. தி. மு. கவுக்கு பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது. எனவே, தி. மு. கவுக்கு எதிரி அ. தி. மு. கவே என்று நிரூபிக்கும் வகையில் அடுத்தடுத்து தொடர் போராட்டங்களை நடத்த அ. தி. மு. க. திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாணியில் தி.மு.க. எதிர்ப்பு போராட்டங்களை அதிகம் நடத்த அ. தி. மு. க. செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளது. (ஐ)

# தமிழ் வழி பாடப் பிரிவுகள் மூடல் மீளப்பெற்றது அண்ணா பல்கலை.!

சென்னை, மே 26

அண்ணா பல்கலைக்கழகத்தின் 11 உறுப்பு கல்லூரிகளில் தமிழ் வழி பாடப் பிரிவுகள் தற்காலிகமாக நீக்கம் செய்யப்படும் என்ற உத்தரவு மீளப்பெறப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் தமிழ் வழி பாடப்பிரிவுகள் தற்காலிகமாக மூடப்படுவதாக அண்ணா பல்கலைக்கழகம் சில நாட்களுக்கு முன்பு உத்தரவிட்டது.

இதன்படி, 11 உறுப்பு கல்லூரிகளில் தமிழ் மொழியில் செயல்பட்டு வரும் பாடப் பிரிவுகள் தற்காலிகமாக நீக்கப்பட்டன. மாணவர் சேர்க்கை இல்லாததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த ஆணை திரும்பப் பெறப்படுவதாக அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் வேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பாராளுமன்ற கட்டட திறப்பு விழாவில் சகல கட்சிகளும் பங்கேற்க வேண்டும்!

**நிதி அமைச்சர் சென்னையில் கோரிக்கை**

சென்னை, மே 26

புதிய பாராளுமன்ற கட்டிட திறப்பு விழாவை புறக்கணிப்பது என்ற முடிவை எதிர்க்கட்சிகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய பாராளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் நரேந்திர மோடி வரும் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்க இருக்கிறார். இந்த விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. குடியரசு தலைவரையும், குடியரசு துணைத் தலைவரையும் மத்திய அரசு புறக்கணித்துள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ள தி. மு. க., காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் விழாவை புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில், சென்னையில் நேற்று நடைபெற்ற, புதிய பாராளுமன்றம் திறப்பு விழா குறித்த செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பாக கேள்விக்கு பதில் அளித்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், "புதிய பாராளுமன்ற திறப்பு விழாவில் கலந்து கொள்ளவில்லை என்ற நிலைப்பாட்டை எதிர்க்கட்சிகள் எடுத்துள்ளன. புதிய பாராளுமன்றம் கட்டப்பட்டுள்ளது. அடுத்த 200 ஆண்டுகள் இருக்கக்கூடிய நாட்டின் பெருமையான சின்னம்.

தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் அங்கு அமர்ந்துதான் மக்களின் பிரச்னைகளை பேசப் போகிறோம். எனவே இந்த சபையை புறக்கணிக்க வேண்டுமா?. இது ஜனநாயகத்தின் கோவில். பிரதமர் முதல் முறையாக பாராளுமன்றத்தில் நுழைந்த போது சிரம் தாழ்த்தி அந்த கோவிலை வணங்கி விட்டுதான் உள்ளே சென்றார். பிரதமரை பிடிக்கவில்லை உள்ளிட்ட எந்த காரணமாக இருந்தாலும் நிகழ்வில் கலந்து கொள்வது நாம் அந்த கோவிலுக்கு நாம் கொடுக்க வேண்டிய மரியாதை.

ஜனநாயகத்தில் மக்களின் பிரச்னைகள் குறித்து பேசக் கூடிய அந்த கோவிலில் அமர்ந்து தான் நாம் மக்களுக்கு தேவையான விசயங்களை கொண்டு வருகிறோம். அதை புறக்கணிப்பது நல்லது இல்லை. நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நான் எதிர்கட்சிகளிடம் வேண்டிக் கொள்கிறேன். அவர்களின் நிலைப்பாடை மறு பரிசீலனை செய்ய வேண்டும். மக்களுக்காகவாது அந்த நிகழ்ச்சியில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ள வேண்டும்." - என்றார். (ஐ)

# வயிற்று பிழைப்புக்காக மக்கள் நாட்டை விட்டுச் செல்கிறார்கள்!

## சுட்டிக்காட்டுகின்றார் அனுரகுமார

கொழும்பு, மே 26

**நாடு முழுவதும் கண்காட்சிகளை நடத்திய அரசாங்கம் பணத்தை விரயமாக்கி வரும் அதேவேளை வயிற்றுப் பிழைப்புக்காக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நாட்டைக் கைவிட்டுச் செல்கின்றனர் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இராணுவக் கண்காட்சி ஒன்றை நடத்த தயாராகி வருகிறது.

கண்காட்சிப் பொருளாதாரத்தில் இருக்கும் எமது நாட்டில் மக்கள் பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாக நாட்டை விட்டு செல்கின்றனர்.

துயரம் நிறைந்த மக்களின் இந்த வாழ்கையை மாற்றவேண்டும். குறுகிய காலம் வாழும் மனிதர்களின் சுதந்திரமான மன நிலையுடன் கூடிய நாட்டை உருவாக்கும் சவாலை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்க ஒளிரும் பொருளாதாரத்தை உருவாக்குவதாக கூறி கண்காட்சிகளை நடத்துகிறார்.

புத்தாண்டு வைபவம், பொசன் வைபவம் மாத்திரமின்றி ஓகஸ்ட்



மாதம் இராணுவக் கண்காட்சியை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்கு தொழில்களுக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை கடந்த 2020 ஆம் ஆண்டு 13 ஆயிரமாக குறைந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டு வீட்டுப் பணிப்பெண் வேலைகளுக்காக 74 ஆயிரம் பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

பயிற்சிகளை பெறாத தொழிலாளர்களாக ஒரு லட்சத்து 4 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

பயிற்சிகளை பெறாத மற்றும் வீட்டுப் பணிப்பெண்களாக சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

போர் அகதிகள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இலங்கை தற்போது இருப்பவர்கள் பொருளாதார அகதிகள்.

அவர்கள் நாட்டை விட்டுச் செல்ல அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறான பின்னணியிலேயே ரணில் விக்கிரமசிங்க கண்காட்சி பொருளாதாரத்தை உருவகித்து காட்டுகிறார்.

இப்படியான நிலைமையில் இலங்கையில் விசேடமான அரசியல் நிலைமை உருவாகியுள்ளது-என்றார்.

(அ)

# போதைப்பொருள் பாவித்த 15 பஸ் சாரதிகள் சிக்கினர்!

கொழும்பு, மே 26

ஹெரோயின் போன்ற விசப் போதைப்பொருளை பயன்படுத்திய நிலையில் பயணிகள் பஸ்களை ஓட்டிய 15 சாரதிகளைக் கடந்த இரண்டு நாட்களில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாரதிகள் விசப் போதைப் பொருட்களை பயன்படுத்திய நிலையில் பஸ்களை ஓட்டுவதாக கிடைத்த தகவலை அடுத்து மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு 106 பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இந்த சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

775 பஸ்கள் சோதனையிடப்பட்டு சாரதிகள் பரிசோதிக்கப்பட்டனர்.

போதைப்பொருளை பயன்படுத்திய சாரதிகளின் சிறுநீர் மாதிரிகளைப் பரிசோதித்த பின்னர் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் மதுபானத்தை அருந்துவிட்டு பஸ்களை ஓட்டும் சாரதிகளை அடையாளம் காண இதுவரை அல்கோலய சிர் குழாய்கள் பயன்படுத்தப்பட்டாலும் ஹெரோயின் போன்ற விசப் போதைப்பொருளை பயன்படுத்திய சாரதிகளை கண்டறிய சரியான முறைகள் எதுவும் இருக்கவில்லை.

இந்த நிலையில், வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான தேசிய சபை இதற்கு தேவையான பணத்தை வழங்கிய பின்னர், ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை விசேட பரிசோதனைக் கருவிகளை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கியது.

இதன் பின்னர் விசப் போதைப் பொருளை பயன்படுத்தி பஸ்களை ஓட்டும் சாரதிகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் ஏனைய மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளன. விசப் போதைப் பொருளை பயன்படுத்தி பஸ்களை ஓட்டும் சாரதிகளுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என்பதுடன் சாரதி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ஜப்பான் வாகனங்கள் இறக்குமதி விரைவில்?

கொழும்பு, மே 26

ஜப்பானிய வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் மிக விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய வாகன நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துடனுமான கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்குமாறு இலங்கையின் வாகன இறக்குமதியாளர்கள் இலங்கை அரசாங்க அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அலி சப்ரி ரஹீமின் செயலால் நாட்டுக்கும் சபைக்கும் இழிவு

## கடுமையாக சாடுகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு, மே. 26

சுங்க சட்டத்தை மீறியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நாட்டு மக்களையும் பாராளுமன்றத்தையும் அவமதித்துள்ளதாக சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரொருவர் ஏழு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த மூன்றரை கிலோ தங்க பிஸ்கட்கள், ஆபரணங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை சட்டத்துக்கு புறம்பான விதத்தில் நாட்டுக்குக் கொண்டு வந்தபோது கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கரு ஜயசூரிய, இந்த விடயம் மிகுந்த வருத்தமளிப்பதோடு,ஒரு நாடு என்ற வகையில் வெட்கப்பட வேண்டிய விடயமாகவும் நாம் இதை கருதுகின்றோம்.

“கௌரவ உறுப்பினர்” என்று விழிக்கப்படும் ஒருவர் நாட்டின் முதன்மை விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர்களுக்கான முனையத்தை பயன்படுத்திச் செய்திருக்கும் இந்தச் செயலானது, இந்த நாட்டின் முக்கிய பிரமுகர் என அழைக்கப்படும் சில தரப்பினர்கள் சட்டத்துக்கு புறம்பாகச் செய்து வரும் ஊழல் செயல்களின் ஒரு பகுதி என்றே நாம் நம்புகின்றோம்.

இந்த செயலின் காரணமாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒட்டுமொத்த பாராளுமன்றத்தையும் இழிவுப்படுத்தியுள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்ணியமிக்க உறுப்பினர்கள் இருப்பதை ஒப்புக்கொள்ளும் அதேவேளை, இவர்கள் போன்ற நபர்களின் செயல்களினால் கண்ணியம்மிக்க பாராளுமன்ற உறுப்பினர்களும் இழிவுபடுத்தப்படுகின்றனர் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்-என்றார்.

(அ)

# என் கைத்தொலைபேசியை பொலிஸார் திருடிவிட்டனர்

## கஜேந்திரன் எம்.பி. தகவல்

யாழ்ப்பாணம், மே 26

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் கைத்தொலைபேசி பொலிஸாரால் திருடப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் கைது செய்யப்பட்டபோது, கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி போராட்டக்காரர்களுடன் பொலிஸார் அடாத்தாக நடந்து கொண்டதைக் காட்சிப்படுத்திய ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனையவர்கள் பொலிஸாரால் மிரட்டப்பட்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் கைத்தொலைபேசியை வாங்கி அருகிலிருந்தவர் இந்த சம்பவங்களைக் காணொளியாக பதிவு செய்து கொண்டிருந்தபோது, அவரிடமிருந்து பொலிஸார் கைத்தொலைபேசியை பறித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அது தனது கைத்தொலைபேசியென உறுதி செய்தபோதும், கைத்தொலைபேசியை நீதிமன்றத்தில் வந்து பெற்றுச்செல்லுங்கள் என பொலிஸார் பதிலளித்துச் சென்றுவிட்டனர்.

கைது செய்யப்பட்ட 9 பேரும், நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும், பொலிஸாரால் பறிக்கப்பட்ட கஜேந்திரனின் கைத்தொலைபேசி வழங்கப்படவில்லை.

நேற்று முன் தினம் பிற்பகல் தனது கைத்தொலைபேசியை தருமாறு பொலிஸாரிடம் கஜேந்திரன் எம்.பி கேட்டபோது, தொலைபேசி தம்மிடமில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

தனது கைத்தொலைபேசியை பொலிஸார் பறித்ததை பலர் பார்த்ததாகவும், தற்போது கைத்தொலைபேசி தம்மிடம் இல்லையெனக் கூறுவதாகவும், பொலிஸாரால் தனது கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளதாகவும் கஜேந்திரன் எம்.பி தெரிவித்தார்.

(அ)

## பொசன் தேசிய விழாவுக்காக

# மிஹிந்தலை விகாரைக்கு மின்சாரம் வழங்கமுடியாது

கொழும்பு, மே 26

இந்த வருடம் பொசன் தேசிய விழா நடைபெறவுள்ள மிஹிந்தலை விகாரைக்கு மின்சாரம் வழங்க முடியாது என அநுராதபுரம் மின் பொறியியலாளர் தம்மிக்க ஜயவர்தன பொசன் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

தேவையான நிதி ஒதுக்கீடுகள் இல்லாததே இதற்கு முக்கிய காரணம் எனவும் அவர் கூறினார்.

பொசன் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் மிஹிந்தலை இராஜமஹா விகாரை மண்டபத்தில் மிஹிந்தலை விகாரையின் தலைவர் வலவாஹெங்குனவெவே தம்மரதன தேரர் தலைமையில் பொசன் குழுவின் தலைவர் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் நடைபெற்றது.

இது தொடர்பில் மாவட்ட மின்சாரச சபை பொறியியலாளர் தெரிவிக்கையில்-

பொசன் பண்டிகையை முன்னிட்டு சாலைத் தடுப்புகள், பக்தர்கள் தங்கும் இடங்கள், குளியலறை, கழிப்பறை, கட்டப்பட்ட இடங்களுக்கு மின் இணைப்பு வழங்கப் பலமுறை கோரிக்கை விடுத்தும், போதியளவு நிதி ஒதுக்கீடுகள் இல்லாததால் மின்சாரம் வழங்கவில்லை-என்றார்.

இதன் காரணமாக இந்த வருட பொசன் பண்டிகையை முன்னிட்டு மிஹிந்தலை யாத்திரை நடவடிக்கைகளை தீபங்களுடன் அனுஷ்டிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக மிஹிந்தலை விகாரை பீடாதிபதி வலவாஹெங்குனவெவே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

(அ)

# கடன் மறுசீரமைப்புக்கான இணக்கத்தை ஏற்படுத்துக!

## சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

கொழும்பு, மே 26

**கடன் வேலைத் திட்டத்தின் கீழ் செப்ரெம்பர் மாதம் அளவில் உள்நாட்டு, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பிற்கான இணக்கப்பாட்டை இலங்கை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மே 11 ஆம் திகதியில் இருந்து 23 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்த நிலையில், இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் வசதி தொடர்பான முதலாவது மீளாய்வு செப்ரெம்பர் மாதம் நடத்தப்படவுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுத் தலைவர் பீற்றர் ப்ருவர், பிரதிநிதிகள் குழுவின் தலைவர் மசஹிரோ நொசாகி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலுவான கொள்கையை பின்பற்றிய பின்னர் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடிந்துள்ளதுடன், மாற்று விகித ஸ்திரத்தன்மை, செலாவணி கையிருப்பு அதிகரிப்புடன் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படுவதற்கான சாதகமான சமிக்ஞை கிடைத்துள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார கொள்கைகள் தொடர்ந்தும் சவால் நிலையில் உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் மேலும் இருவருக்கு ஆளுநர் பதவி?

கொழும்பு, மே 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு திரும்பியதும் மேலும் இரண்டு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க ஆகியோர் புதிய ஆளுநர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என அரசியல் வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

அண்மையில் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்கள் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டு, புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தநிலையில், தற்போது, ஜப்பானுக்கான விஜயத்தை நிறைவு செய்து எதிர்வரும் சனிக்கிழமை ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர், மேலும் இரண்டு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# சுரேஷ் எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, மே 26

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட உள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்தை மீறிப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தினாலேயே பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷுக்கு எதிராக இவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# புதிய தொழிலாளர் சட்ட வரைவை சட்டமூலமாக தயாரிக்கத் திட்டம்

கொழும்பு, மே 26

புதிய தொழிலாளர் சட்ட வரைபை எதிர்வரும் ஜூன் மாதத்தின் முதலாவது வாரத்தில் சட்டமூலமாக தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

புதிய தொழிலாளர் சட்டங்களை உருவாக்குவது தொடர்பில் முதலீட்டுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்தவர்களிடமிருந்து யோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# கம்பஹாவுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, மே 26

கம்பஹா மாவட்டத்தில் எதிர்வரும் சில மாதங்களில் டெங்கு காய்ச்சல் பரவல் மேலும் அதிகரிக்கும் அபாயம் நிலவுவதாக கம்பஹா மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்துக்குள் பாரியளவில் டெங்குக் காய்ச்சல் பரவி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக கம்பஹா மாவட்ட செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக டெங்கு நோயாளர்கள் உள்ள மாவட்டமாக கம்பஹா மாவட்டம் பதிவாகியுள்ளது.

நாட்டில் இதுவரை 36911 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

இம் மாதத்தில் 7203 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சமூக வைத்திய நிபுணர் இந்திக வீரசிங்க தெரிவித்தார்.

பதிவாகிய மொத்த நோயாளர்களில் அதிகமானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

இதில் கம்பஹா மாவட்டத்தில் 22 வீதமான நோயாளர்களும் கொழும்பு மாவட்டத்தில் 20 வீதமான நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக சமூக வைத்திய நிபுணர் இந்திக வீரசிங்க கூறினார்.

நாடளாவிய ரீதியில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 25 வீதமானோர், பாடசாலை மாணவர்கள் என வைத்திய நிபுணர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

(அ)

# ரயிலுடன் மோதிய ஓட்டோ

வவுனியா, மே 26

வவுனியா பேயாடிகூழாங்குளத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ரயிலுடன் ஓட்டோ மோதியதில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நேக்கிச் சென்ற ரயிலுடனேயே ஓட்டோ மோதியது.

இதன்போது ஓட்டோச் சாரதி காயமடைந்தார். (அ)



# கிணற்றினுள் தவறி வீழ்ந்த யானை குட்டி



வவுனியா, மே 26

வவுனியா மடுக்கந்த பகுதியில் யானைக்குட்டி ஒன்று கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த நிலையில் அதனை மீட்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் அமைந்துள்ள பயன்படுத்தப்படாத கிணற்றினுள் யானைக்குட்டி ஒன்று தவறி வீழ்ந்தமையை அவதானித்த கிராமவாசிகள் இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் யானைக்குட்டியை மீட்கும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதேவேளை, குறித்த குட்டியின் தாய் யானை அந்தப் பகுதியில் உலாவித் திரிவதால் மீட்புப் பணியில் தொய்வுநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(அ)

## வவுனியா வெடுக்குநாறிமலை

# ஏணிப் படி வழக்கிலிருந்து ஆலய நிர்வாகம் விடுதலை

வவுனியா, மே 26

வவுனியா வெடுக்குநாறிமலையில் ஏணிப் படி பொருத்தியமை தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இருந்து ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு நேற்று வவுனியா நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு போதிய சான்றுகள் இன்மையால் வழக்கில் இருந்து ஆலயப் பூசகர் மற்றும் நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த வழக்கில் ஆலயநிர்வாகம் சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திருஅருள் தெரிவிக்கையில்-

கடந்த 2019 ஆம் ஆண்டு ஆலயத்தில் மரத்திலான ஏணிப் படி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதனைச் சீரமைத்து ஏணிப்படி ஒன்று அமைக்கப்பட்டமை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த ஏணிப் படியை சீரமைத்தமைக்கான சான்றுகள் இல்லை என அரச சட்டவாதிகளால் நேற்று நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த மூன்று பேரும் விடுவிக்கப்பட்டனர்-என்றார்.

(அ)

ஈழநாடு



# பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய மூன்று பேர் கைது!

கொழும்பு, மே 26

பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிக் கடமைக்கு தடையை ஏற்படுத்திய மூன்று பேரை களனி பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பேலியகொடை ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பாலத்திற்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர், தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர நிறுத்திச் சோனையிட முயற்சித்துள்ளார்.

அப்போது அந்த இடத்துக்குச் சென்ற பெண்ணொருவர், பொலிஸ் உத்தியோகத்தருடன் தகராறை ஏற்படுத்தியதுடன் மூன்று பேர் இணைந்து அவரை தாக்கியுள்ளனர்.

சந்தேக நபர்களான பெண் மற்றும் ஏனைய இரண்டு நபர்கள் களனி பட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த, 51, 20 மற்றும் 22 வயதானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.(அ)

# அரசு கைவிட்டதாலேயே எதிராக வாக்களித்தேன்!

## நான் குற்றவாளியல்ல என்கிறார் அலி சப்ரி ரஹீம்



கொழும்பு, மே 26

**தாம் கஷ்டத்தில் இருந்த போது எவரும் காப்பாற்றாத காரணத்தினால், தான் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்ததாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்தார்.**

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்யும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அலி சப்ரி ரஹீம் இதனை கூறினார்.

அலி சப்ரி ரஹீம் எம்.பி. சட்டவிரோதமாக இலங்கைக்கு சுமார் மூன்றரை கிலோ தங்கத்தை கொண்டு வந்தபோது சுங்கத்துறையினரால் கைது செய்யப்பட்டு அது தொடர்பான அபராதத்தைச் செலுத்திய பின்னர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு சென்றிருந்தார்.

அதன்போது, ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அலி சப்ரி ரஹீம் மேலும் கூறியதாவது-

ஜனக ரத்நாயக்க எனக்கு எதிராக எதனையும் செய்யவில்லை.

இது என் தவறல்ல. எனது உதவியாளர் ஒருவரே தங்கத்தை கொண்டுவந்தார். ஆனால் நானே குற்றவாளி எனக் காட்டப்பட்டது. இதை நான் ஜனாதிபதியின் செயலாளரிடம் கூறினேன். பிரதமரிடம் கூறினேன். எவரும் உதவிக்கு வரவில்லை. எனக்கு அநீதி இழைக்கப்பட்டது.

எந்த தவறும் செய்யாமல் 75 லட்சம் அபராதம் செலுத்தி வெளியே வந்தேன். எனது உதவியாளர் ஒருவரே இந்த பையை பொதிசெய்து எனது பையில் வைத்தார். அவரது தவறுக்காக இறுதியில் நான் மாட்டிக்கொண்டேன்.

எனக்கு இதுபோன்ற அநீதி நடந்திருக்கும்போது நான் ஏன் அரசாங்கத்துடன் இருக்க வேண்டும்? இதுபோன்ற நேரத்தில் அவர்கள் என்னைக் காப்பாற்றவில்லை என்றால், அரசாங்கத்துடன் இருப்பதில் அர்த்தமில்லை. அதனால்தான், நான் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தேன்-என்றார். (அ)

# அஞ்சலில் வந்த மூன்றரை கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள்!

கொழும்பு, மே 26

இலங்கை சுங்கத்தின் மத்திய தபால் பரிவர்த்தனை பிரிவின் அதிகாரிகளால் குஷ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

தபால் மூலம் அனுப்பப்பட்ட பொதிகளில் 3 கிலோ கிராம் 475 கிராம் “குஷ்” என்ற போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் மொத்த பெறுமதி 3 கோடியே 47 இலட்சம் ரூபா என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து பொரலஸ்கமுவ, வெள்ளவத்தை, மினுவாங்கொடை, வெலிசறை, நுவரெலியா மற்றும் தலங்கம ஆகிய இடங்களில் உள்ள முகவரிகளுக்கு சுமார் 10 பொதிகள் தபால் மூலம் அனுப்பப்பட்டன.

இந்தப் பொதிகளைப் பெற அவற்றின் உரிமையாளர்கள் முன்வராததால், கடந்த 16 ஆம் திகதி பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள், அஞ்சல்துறை அதிகாரிகள் முன்னிலையில் சுங்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அந்த சோதனையில், இந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக குறித்து போதைப்பொருள் கையிருப்பு பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அறிவார்ந்த அரசியல்வாதிகள் இல்லை

## வாகன இறக்குமதியாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 26

நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் முன்வைக்கும் தீர்மானங்களைக் கேட்பதற்கு பொருத்தமான அரசியல்வாதிகள் இல்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே இதனை கூறினார்.

அத்துடன் அரசாங்கத்திற்கு இலாபத்தை பெற்றுத்தரும் வகையில் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்குமாறு இலங்கையின் வாகன இறக்குமதியாளர்கள் இலங்கை அரசாங்க அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து இருந்தனர்.

இந்த நிலையில் ஜப்பானிய வாகனங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் மிக விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய வாகன நிறுவன பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துடனுமான கலந்துரையாடலிலே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது,

இதனைத் தொடர்ந்து ஜப்பானிடம் இருந்து உதவி பெறலாம். ஆனால் தமது முன்மொழிவுகளைக் கேட்டு செயல்படும் வகையில் அறிவார்ந்த அரசியல்வாதிகள் நாட்டில் இல்லாதது துரதிர்ஷ்டவசமானது-என்றார்.

(அ)

# தன்னைக் கடத்த முயற்சிக்கப்பட்டதாக பொலிஸில் பொய் கூறினார் மாணவன்!

கொழும்பு, மே 26

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது தன்னை ஒரு குழுவினர் வானில் கடத்திச் செல்ல முற்பட்டதாக நாரஹேன்பிட்டி பொலிஸில் பொய் முறைப்பாடு செய்த 11 வயது பாடசாலை மாணவன் ஒருவன் எச்சரிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

சிறுவர் கடத்தல் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பரவிவரும் காணொளிகளைப் பார்த்து தான் இவ்வாறான பொய்யான கதையை உருவாக்கியதாக பொலிஸாரின் விசாரணையின்போது மாணவன் தெரிவித்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

பம்பலப்பிட்டி பிரதேசத்திலுள்ள கல்லூரி ஒன்றில் கல்வி கற்கும் இம்மாணவன், கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, பார்க் வீதியில் வைத்து வானில் வந்த சிலர் தன்னைக் கடத்திச் செல்ல முற்பட்டதையடுத்து, அந்தக் கும்பலிடம் இருந்து தப்பி வீட்டுக்கு ஓடியதாக தனது தந்தையிடம் தெரிவித்துள்ளான்.

இது தொடர்பில் முறைப்பாடு கிடைத்தவுடன் நாரஹேன்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததுடன், மாணவனைக் குறிப்பிட்ட பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று அங்கு காணப்பட்ட சி.சி.ரி.வி. கமெராக்களை சோதனையிட்டபோதிலும் அவ்வாறான சம்பவம் எதுவும் அந்தப் பகுதியில் கண்டறியப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

(அ)

# வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலம் நேற்று தோண்டி எடுப்பு

கொழும்பு, மே 26

நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சடலம் நேற்று வியாழக்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது.

இதனால் சடலம் புதைக்கப்பட்ட பொரளை பொது மயானத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை மயானத்திற்கு அருகில் வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் தமது காரில் கைகள் மற்றும் வாய் ஆகியன கட்டப்பட்ட நிலையில் இருந்து மீட்கப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை, தினேஷ் ஷாப்டரின் மரணம் குறித்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் பல்வேறு தரப்பினரிடம் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணிக்காக வெளிநாடு சென்ற மற்றுமொரு பெண் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து மரணம்

கொழும்பு, மே 26

மலேசியாவில் பணியாற்றி வந்த இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் ஒருவர் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் இரண்டாவது மாடியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

குருநாகல்-கொபேகனே, அரலுகஸ்வெவ பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வருடம் டிசெம்பர் 18ஆம் திகதி, மாலபேயில் வசிக்கும் தனது நண்பர் ஒருவரின் ஊடாக சுற்றுலா விஸாவில் இப்பெண் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதாக குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில், கடந்த 23ஆம் திகதி, வீட்டில் வேலை செய்ய முடியாத நிலையில் உள்ளதாகவும், வேறு இடத்தில் தற்போது பணியில் இணைந்துள்ளதாகவும் கணவரிடம் அப்பெண் தொலைபேசியில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று முன்தினம் இரவு அவர் அடுக்குமாடி குடியிருப்பொன்றின் இரண்டாவது மாடியின் ஜன்னலிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக வீட்டாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவரது கணவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் சிங்கப்பூரில் இலங்கை பெண் ஒருவர் அடுக்குமாடி குடியிருப்பொன்றிலிருந்து விழுந்து உயிரிழந்தார்.

(அ)

# மோடியை ‘பாஸ்’ என புகழ்ந்த ஆஸி. பிரதமர் இவர்களின் நெருக்கத்துக்கு என்ன காரணம்?

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இந்திய வம்சாவளி மக்களிடையே பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது ஆஸ்திரேலியாவின் பிரதமர் ஆண்டனி அல்பனீஸும் (உள்ளூரில் ஆல்பனேஸீ என அழைக்கப்படுகிறார்) உடனிருந்தார்.

சிட்னியில் நடந்த இந்த நிகழ்ச்சியில் இரு பிரதமர்களும் “லிட்டில் இந்தியா கேட்வே” எனப்படும் நுழைவாயிலுக்கு அடிக்கல் நாட்டினர்.

“பிரதமர் ஆண்டனி அல்பனீஸை இந்திய மண்ணில் ஆமதாபாத் நகரில் வரவேற்கும் வாய்ப்பு இந்த ஆண்டு எனக்கு கிடைத்தது. இன்று அவர் ‘லிட்டில் இந்தியா” நுழைவாயிலுக்கு அடிக்கல்லை நாட்ட எனக்கு வாய்ப்பளித்தார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,” என்று மோடி அப்போது கூறினார்.

அல்பனீஸ் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பது இந்தியர்கள் மீது அவருக்கு இருக்கும் பாசத்தை காட்டுகிறது என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய ஆஸ்திரேலிய பிரதமர் அல்பனீஸ், “மோடி இஸ் பாஸ்,” என்று கூறினார்.






**கிரிக்கெட்டில் உள்ள சுவாரஸ்யம் நட்பிலும் உள்ளது - மோடி**

2014ஆம் ஆண்டு ஒருமுறை தான் ஆஸ்திரேலியா வந்தபோது, இந்திய பிரதமரின் அடுத்த வருகைக்காக ஆஸ்திரேலியா 28 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதில்லை என்று உறுதியளித்ததாக பிரதமர் மோடி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே உள்ள விளையாட்டு மூலமான தொடர்பு குறித்துப் பேசிய மோடி, நீண்ட காலமாக கிரிக்கெட் இரு நாடுகளையும் இணைத்து வந்துள்ளது. ஆனால் இப்போது டென்னிஸ் மற்றும் திரைப்படங்கள் இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் இணைக்கின்றன என்று கூறினார்.

“இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை காமன்வெல்த், கிரிக்கெட் மற்றும் கறி ஆகிய 3-சி வரையறுக்கும் ஒரு காலம் இருந்தது. பின்னர் 3டி- அதாவது டெமாக்ரஸி, டயஸ்போரா மற்றும் தோஸ்தி (நட்புறவு) இருந்தது. ஆனால் இப்போது அது 3ஈ - அதாவது எனர்ஜி, எஜூகேஷன் மற்றும் எக்கானமிக்கு மாறியுள்ளது.”

“கிரிக்கெட் போட்டியில்’ எவ்வளவு சுவாரசியம் உள்ளதோ அந்த அளவிற்கு மைதானத்திற்கு வெளியேயும் எங்கள் நட்பில் சுவாரசியம் உள்ளது,” என்று அவர் கூறினார்.

**ஷேன் வார்ன் பற்றிய நினைவுகள்**

மறைந்த கிரிக்கெட் வீரர் ஷேன் வார்னை நினைவுகூர்ந்த பிரதமர் மோடி, “ஜாம்பவான் கிரிக்கெட் வீரர் ஷேன் வார்ன் கடந்த ஆண்டு மறைந்தபோது, ஆஸ்திரேலியாவுடன் சேர்ந்து கோடிக்கணக்கான இந்தியர்களும் துக்கம் அனுசரித்தனர். நெருக்கமான யாரையோ இழந்தது போல் இருந்தது,” என்று குறிப்பிட்டார்.

“நமது இந்தியாவும் வளர்ந்த நாடாக



மாற வேண்டும் என்று உங்களுக்கு ஒரு கனவு உள்ளது. உங்கள் இதயத்தில் இருக்கும் கனவு என் இதயத்திலும் உள்ளது.”

“கொரோனா தொற்றுநோய் தாக்கிய போது தடுப்பூசி இயக்கம் மிக வேகமாக செயல்படுத்தப்பட்ட நாடு. மிக வேகமாக வளரும் பொருளாதாரம் கொண்ட நாடு. ஸ்மார்ட் போன் டேட்டா நுகர்வில் உலகில் முதலித்தில் உள்ள நாடு. பால் உற்பத்தியில் இன்று முதலிடத்தில் உள்ள நாடு. இணைய பயன்பாட்டில் இரண்டாவது இடத்தில் உள்ள நாடு. இன்று உலகின் மூன்றாவது பெரிய ஸ்டார்ட்அப் உள்கட்டமைப்பைக் கொண்ட நாடு. உலகின் மூன்றாவது பெரிய சிவில் விமானச் சந்தை கொண்ட நாடு. அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ந்த நாடாக மாறும் இலக்குடன் முன்னேறி வரும் நாடு. அதுதான் இந்தியா.”

“இந்தியாவில் திறமைக்கு குறைவில்லை இந்தியாவில் வளங்களுக்கும் பஞ்சமில்லை. இன்று உலகின் மிகப்பெரிய மற்றும் இளமையான டேலண்ட் பக்ட்ரி இந்தியாவில் உள்ளது,” என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

**பிரிஸ்பேனில் திறக்கப்படவுள்ள துணை தூதரகம்**

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் புதிய துணை தூதரகம் திறக்கப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

“இந்தியா தனது ஜி-20 தலைவர் பதவியின் கருப்பொருளை தீர்மானிக்கும் போது, அது சொல்கிறது - ஒன் எர்த் (ஒரே பூமி), ஒன் ஃபேமிலி (ஒரே குடும்பம்), ஒன் ஃப்யூச்சர்(ஒரே எதிர்காலம்),” என்று அவர் கூறினார்.

“சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இந்தியா சூரிய சக்திக்கு பெரிய இலக்குகளை நிர்ணயிக்கும் போது, அது சொல்கிறது - ஒன் சன் (ஒரு சூரியன்), ஒன் வேர்ல்ட் (ஒரு உலகம்), ஒன் க்ரிட் (ஒரு மின்தொகுப்பு).”

“உலக சமூகம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்பும் போது, அது சொல்கிறது - ஒன் எர்த் (ஒரே உலகம்), ஒன் ஹெல்த் (ஒரே ஆரோக்கியம்).”

“இன்று இந்தியா ‘உலக நன்மைக்கான சக்தி’ என்று அழைக்கப்படுகிறது. எங்கு பேரிடர் ஏற்பட்டாலும், இந்தியா உதவ தயாராக உள்ளது.”

“மீபத்தில் துருக்கியில் ஏற்பட்ட நில நடுக்கம் அங்கு பேரழிவை ஏற்படுத்திய போது, ‘ஆபரேஷன் தோஸ்த்” மூலம் இந்தியா உதவிக்கரம் நீட்டியது.”

‘நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் இந்தியாவுக்கு வரும்போதெல்லாம், சில ஆஸ்திரேலிய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை உங்களுடன் அழைத்துவாருங்கள். இது இந்தியாவை அறிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் அவர்களுக்கு அதிக வாய்ப்பளிக்கும்,” என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

**பிரதமர் மோடி தான் பாஸ் - அல்பனீஸ்**

பிரதமர் மோடியை வரவேற்ற ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பனீஸ், புரூஸ் ஸ்பிரிங்ஸ்டீன் இந்த மேடைக்கு வந்திருந்தபோது தாம் அவரை பார்த்தாகவும், நரேந்திர மோடிக்கு கிடைத்த வரவேற்பு அவருக்குக்கூட கிடைக்கவில்லை என்றும் கூறினார். ‘மோதி இஸ் பாஸ்’ என்று அவர் தெரிவித்தார்.

‘கடந்த ஆண்டு நான் இந்தியா வந்திருந்தேன். அவை எனக்கு மறக்க முடியாத தருணங்கள். குஜராத்தில் ஹோலி கொண்டாடினேன். டெல்லியில் மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினேன். நான் செல்லும் எல்லா இடங்களிலும் ஆஸ்திரேலியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான தொடர்பை உணர்ந்தேன்,” என்று அவர் கூறினார்.

“இந்தியாவைப் புரிந்து கொள்ளவேண்டுமானால் ரயில் மற்றும் பேருந்தில் பயணம் செய்யுமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்,” என்றார் அவர்.





# கனடா - இலங்கை ராஜீய மோதல்கள்: மோசமான பாதையை நோக்கி செல்கிறதா?

ரஞ்சன் அருண் பிரசாத்



கனடா நாடாளுமன்றத்தில் அதன் எம்.பிக்களால் நிறைவேற்றப்பட்ட தமிழர் இனப்படுகொலை தினம் கடைப்பிடிப்பு (மே 18) முன்மொழிவு தொடர்பான அறிவிப்பை கனடா பிரதமர் ஜெஸ்டீன் ட்ரூடோ வெளியிட்ட விவகாரத்தில் தனது கடுமையான எதிர்ப்பை இலங்கை தெரிவித்துள்ளது.

இது தற்போது அந்த இரு நாடுகளுக்கும் இடையில் ராஜீய அளவிலான மோதலாக உருப்பெற்றுள்ளது.

கனடா பிரதமர் தமிழர் இனப்படுகொலை தினமாக மே 18ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பை மே 23ஆம் திகதி வெளியிட்ட பிறகு, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கைக்கான கனடா தூதுவரை நேரில் அழைத்து, கனடா அரசின் அறிவிப்பை முழுமையாக நிராகரிப்பதாக கூறினார்.

இலங்கை எம்.பி உதய கம்மன்பில இந்த விஷயத்தில் கனடாவுக்கு எதிர்வினையாற்றும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார்.

இலங்கையில் நடக்காத தமிழ் இனப்படுகொலைக்காக ஒரு திகதியை ஒதுக்குவதற்கு பதிலாக, கனடாவில் ஆதிவாசி தினம் கடைப்பிடிக்கப்படும் ஜூன் 21ஆம் திகதியை, கனடா ஆதிவாசி இனப்படுகொலை தினமாக பெயரிட வேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

### ட்ரூடோவின் பேச்சு ஏன் சர்ச்சையானது?

ஜஸ்டின் ட்ரூடோ இது பற்றி தமது நாட்டு நாடாளுமன்றத்தில் பேசுகையில், 14 வருடங்களுக்கு முன்பு நிறைவு பெற்ற இலங்கையின் சிவில் யுத்தத்தின் கடைசி நாட்களில் முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலை உள்ளிட்ட சம்பவங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் காவு கொடுக்கப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

“இலங்கையில் 14 வருடங்களுக்கு முன்னர் முடிவடைந்த ஆயுத போராட்டத்தில் நடந்த உயிரிழப்புக்களை நாம் இன்று நினைவு கூர்கிறோம். முள்ளிவாய்க்காலில் படுகொலை உள்ளிட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது உயிர்களை இழந்ததுடன், பலர் இன்னமும் காணாமல் போயுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் அல்லது இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரை பாதுகாத்துக்கொண்டவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களுடன் இணைந்து இந்த நாளை நாம் நினைவு கூர்கிறோம்.”

“பல ஆண்டுகளாக நாடு முழுவதுமுள்ள சமூகங்களில் நான் சந்தித்த பலர் உள்ளிட்ட, மோதல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் - கனேடியர்களின் கதைகள், மனித உரிமைகள், அமைதி மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்பதை நினைவூட்டியது,” என்று ட்ரூடோ பேசினார்.

மேலும், “2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் பிரேரணையொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம், எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்ததுடன், நாட்டின் மனித உரிமை, பொருளாதாரம் மற்றும் அரசியல் சர்ச்சைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரினோம்.”

“எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை பாதுகாத்துக்கொள்வதற்காக, இலங்கைக்குள் சமய சுதந்திரம், நம்பிக்கை, பன்மைத்துவ சுதந்திரம் ஆகியவற்றை கோருவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையிலுள்ள ஏனைய தீர்மானங்களை நிறைவேற்றுவதில் கனடா உலகளாவிய தலைமைத்துவத்தை வழங்குகின்றது. மேலும், 2023ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மனித உரிமை மீறலுக்கு பதிலளிக்கும் வகையில், எமது அரசாங்கம், இலங்கை அரச அதிகாரிகள் நால்வருக்கு எதிராக தடைகளை விதித்தது,” என்று அவர் குறிப்பிட்டார்.

“தமிழ் - கனேடியகள் நம் நாட்டிற்காக செய்த மற்றும் தொடர்ந்தும் செய்து வரும் பங்களிப்புக்களை அங்கீகரிக்கும் வகையில் அனைத்து கனேடியர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். இலங்கையில் இடம்பெற்ற ஆயுதப் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் அறிந்துக்கொள்ளுமாறும், துன்பப்படும் அல்லது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் இணைந்து ஒற்றுமையை வெளிப்படுத்துமாறும் நான் அனைவரையும் ஊக்குவிக்கிறேன்,” என கனடா பிரதமர் தெரிவித்தார்.

### அரசியல் தேவைக்கான அறிவிப்பு

“இலங்கையில் இடம்பெற்ற சிவில் போரின் போது, இனப்படுகொலை இடம்பெற்றதாக கனடா பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோவினால் வெளியிடப்பட்ட கருத்தானது, அரசியல் சார்பு கொண்ட சர்ச்சைக்குரிய கருத்து என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்த கருத்தானது கனடாவின் உள்ளக அரசியல் தேவையை கருத்திற் கொண்டு வெளியிடப்பட்ட கருத்து என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளதாக, வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் மூன்று



தசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு மத்தியில், இடம்பெற்றதாக கூறப்படும் இனப்படுகொலை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள இவ்வாறான அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை இலங்கை நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மை, சமாதானம், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்றவற்றிற்காக இலங்கை அரசாங்கம் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த தருணத்தில், கனடா பிரதமரினால் முன்வைக்கப்பட்ட இந்த கருத்தானது, பொய்யானது மற்றும் அடிப்படையற்ற குற்றச்சாட்டு காரணத்தினால், இலங்கையர்கள் துருவப்படுத்தப்படலாம் என இலங்கைக்கான கனடா தூதுவரிடம், வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த “இனப்படுகொலை” இலங்கையினால் நடத்தப்பட்டது என ஒருதலைபட்சமாக முன்வைக்கப்படும் போலி குற்றச்சாட்டுக்கள், புலம்பெயர்ந்து வாழும் பிரிவினைவாத சிறுபான்மையினரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவானது என வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கனடா பிரதமரினால் முன்வைக்கப்பட்ட கருத்து தொடர்பில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ட்விட்டர் பதிவொன்றின் ஊடாக தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

மேற்குலக நாடுகளிலுள்ள பிரிவினைவாதிகள், தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள், நிதி சேகரிப்பாளர்களுடன் விளையாடும் தலைவர்கள், அரசியல் லாபத்திற்காக கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்னர், உண்மையான வரலாற்றை தேடி பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அவர்கள் எமது இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை தொடர்ந்தும் தவறான வழிக்கு அழைத்து செல்கின்றனர் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்திற்கு இதனை கொண்டு செல்ல முடியும்.

இலங்கை குறித்து முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்நாட்டு நீதிமன்ற கட்டமைப்பிற்குள் வழக்கு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில், அதனை சர்வதேச நீதிமன்றத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடியும் என மாற்று கொள்கைக்கான மத்திய நிலையத்தின் மூத்த நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, தெரிவிக்கின்றார்.

தமிழர் இனப்படுகொலை தினத்திற்காக கனடா பிரதமரால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

“அவர்களது நாட்டில் புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் கனடா அரசாங்கத்திற்கு கூறியுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டே, பிரதமர் இதனைக் கூறியுள்ளார்”

“இலங்கை அரசாங்கம் அதனை நிராகரிக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ளாது.”

“எனினும், அங்குள்ள தமிழ் பிரஜைகள் இந்த விடயங்கள் தொடர்பில் கதைத்துள்ளனர். அந்த எண்ணப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளனர். அதுவே அவர்களின் நிலைப்பாடாக காணப்படுகின்றது. இந்த தலைப்பு தொடர்பில் வெவ்வேறு எண்ணங்கள் இருக்கக்கூடும். நினைத்ததை பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. அவர்கள் கூறுவதை நிராகரிப்பதற்கு எமக்கு உரிமை உள்ளது.”

“இதனை தீர்ப்பதற்கு இலங்கையில் வழக்கு தாக்கல் செய்து, குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்து தீர்க்க வேண்டும். இல்லையென்றால், சர்வதேச ரீதியில் தகுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.”

‘‘இலங்கை இதற்கு முகம் கொடுக்க தவறும் பட்சத்தில், இதனை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியும். அது தான் நடக்கக்கூடும். நாம் நடவடிக்கை எடுப்போமாயின், நாம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வோமாயின், நாம் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்போமாயின், சர்வதேச ரீதியில் எந்தவொரு பிரச்னையும் கிடையாது. எனினும், நாம் ஒன்றையும் செய்யாவிடின், சர்வதேச மட்டத்திற்கு செல்லக்கூடும்” என அவர் கூறுகின்றார்.

கனடா பிரதமர் ஜஸ்டீன் டரூடோ, தமிழ் மக்கள் தொடர்பில் அபூர்வமான அனுதாபம் கொள்ளவில்லை என்பதுடன், கனடா நாடாளுமன்றத்தில் 28 ஆசனங்களையும் வெற்றிக் கொள்ள கனடாவில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகள் அடிப்படையாகக் கொண்டுள்ளமையினால், அந்த வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக முதலை கண்ணீர் வடிப்பதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜூன் மாதம் 21ம் திகதியை இனப்படுகொலை தினமாக பிரகடனப்படுத்துமாறு கனேடிய ஆதிவாசிகள் யோசனையொன்றை முன்வைத்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

“ஆதிவாசிகளுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் கனடா வரலாற்று முழுவதும் மீறப்பட்டுள்



ளன. கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள், மை காய்வதற்கு முன்னரே கிழித்தெறியப்பட்டன.”

“நான் இதனை கூறவில்லை. கால் குயின் என்கின்ற கனேடிய ஆதிவாசிகளின் தலைவரே இதனை கூறுகின்றார்”

“பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள கம்லூப்ஸ் ஆதிவாசிகளின் பாடசாலை வளாகத்தில் 2021ம் ஆண்டு மனித புதைக்குழியொன்று கண்டுபிடிக்கப்பட்டது”

“அதில் 215 பாடசாலை மாணவர்களின் சடலங்கள் காணப்பட்டன. மூன்று வயது குழந்தைகளின் சடலங்களும் காணப்பட்டன”

“ஆதிவாசிகளின் குடியிருப்பு பாடசாலை என்றால் என்ன? ஆதிவாசி குழந்தைகளை தமது கலாசாரத்திற்கு இழுத்தெடுத்து, ஆதிவாசிகளை கனடாவிலிருந்து விரட்டுவதற்காக, கனடா அரசாங்கம் லட்சக்கணக்கான ஆதிவாசி குழந்தைகளை வலுக்கட்டாயமாக கடத்தி, இந்த குடியிருப்பு பாடசாலைக்கு அழைத்து வந்தார்கள்.”

“அவர்கள் ஐரோப்பிய கலாசாரத்திற்கு இணங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்த குழந்தைகள் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர். இந்த குடியிருப்பு பாடசாலை 1870ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. 1996 வரை நடத்திச் செல்லப்பட்டது.”

“அதனால், நடத்தப்பட்டாத தமிழ் இனப்படுகொலைக்காக மே 18ம் திகதியை ஒதுக்குவதற்கு பதிலாக, கனடாவின் ஆதிவாசி தினமான ஜூன் 21ம் தேதியை கனடா ஆதிவாசி இனப்படுகொலை தினமாக பெயரிடுமாறு நாம் யோசனையொன்றை முன்வைக்கின்றோம்” என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேட்டுக் கொண்டுள்ளார்.

# எச்.எஸ்.பி.சி. அதிகாரிகள் யாழ். பல்கலைக்கு விஜயம்



யாழ்ப்பாணம், மே 26

சர்வதேச முன்னணி வங்கியான எச்.எஸ். பி.சி வங்கியின் இலங்கைக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட உயரதிகாரிகள் சிலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

எச்.எஸ். பி.சியின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் சேர்ஜ்னர், வங்கியின் பிரதம இடர் முகாமையாளர் கெலும் எதிரிசிங்க, கண்டிக் கிளையின் முகாமையாளர் கித்மல் விமலவீர, யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் ஏ.சிவானந்தன் அரவிந்தன், சர்வதேச இணை வங்கிச் சேவையின் வாடிக்கையாளர் உறவுகளுக்கான முகாமையாளர் மேனகா சண்முகநாதன் மற்றும் யாழ்ப்பாணக் கிளை அலுவலர் செல்வராசா கேசவன் ஆகியோரே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோருடன் கலந்துரையாடினர். (அ)

# மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதானிகளை சந்தித்த சிறீதரன்

## ஆக்கிரமிப்புகள் குறித்து விளக்கினார்

கொழும்பு, மே 26

இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் சமகால நிலை குறித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதானிகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான கலந்துரையாடல், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்த விவரண அறிக்கையை, கடந்த 9ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பித்த சிறீதரன் எம்.பி, அவ் அறிக்கையின் பிரதிகளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் தூதுவர்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள் என்பவற்றுக்கு தனித்தனியே அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற அவ் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே, ஆணைக்குழுவின் பிரதானிகளால் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, தனியாருக்கோ, மத நிறுவனங்களுக்கோ சொந்தமான காணிகளில் நடைபெறும் ஆக்கிரமிப்புகள் மற்றும் அனுமதியற்ற கட்டுமானங்கள் தொடர்பில் உரிய தரப்பினர் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது, பொலிஸ் முறைப்பாடு செய்தல், வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தல் உள்ளிட்ட வழிமுறைகளையும் கையாளும் பட்சத்தில், இதுவிடயமாக தமது நிறுவனம் சார்ந்து மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர், நீதிபதி ரோகினி மாரசிங்க சுட்டிக்காட்டியதாக சிறீதரன் எம்.பி தெரிவித்தார்.

# கிழக்கு ஆளுநர் செந்தில் சம்பந்தனுடன் சந்திப்பு

கொழும்பு, மே 26

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் ம. ரமேஸ்வரன் ஆகியோர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலை வர் இரா.சம்பந்தனை, அவரது இல்லத்தில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

இதன்போது மறைந்த தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகம் தொண்டமான் காலத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இருந்த வலுவான உறவு குறித்து சம்பந்தன் நினைவூட்டினார்.

இச்சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன். இரா. சாணக்கியன் ஆகியோர் உடனிருந்தனர்.

# தொலைபேசியால் பறிப்போன இரு இளைஞர்களின் உயிர்கள்

கொழும்பு, மே 26

தொலைபேசியில் பேசிக்கொண்டு ரயில்பாதையில் நடந்துச் சென்ற இரண்டு இளைஞர்கள் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளனர்

கம்பஹா மாவட்டம் வெயங்கொடை, வந்துருவ ரயில் நிலையத்துக்கு அருகில் இந்த சம்பவம் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வந்துருவ பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதான கவிஷ்க லக்மால் மற்றும் 19 வயதான எஸ்.ஏ.திவங்க ஆகிய இளைஞர்களே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்த இளைஞர்களின் வீடுகள் ரயில் பாதைக்கு அருகில் அமைந்துள்ளன. சுற்றுலாப் பயணம் செல்வதற்காக நேற்று அதிகாலை தயாராகி, ரயில் நிலையத்துக்கு ரயில் பாதை வழியாக தொலைபேசியில் பேசிக்கொண்டு செல்லும்போது பின்புறம் இருந்து வந்த ரயில் இளைஞர்கள் மீது மோதியுள்ளது.

பதுளையில்இருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற கடுகதி ரயிலில் மோதுண்டு இளைஞர் இறந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த இளைஞர்களின் உடல்கள் வெயங்கொடை ரயில் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (அ)






# சுமந்திரன் எம்.பி. சட்டத்தரணியாக சறுக்கிய, தோற்ற வழக்கு அபாயா!

## கூறுகிறது ஐக்கிய காங்கிரஸ் கட்சி

நிந்தவூர், மே 26

**திருகோணமலை சண்முகா மகளிர் வித்தியாலய முஸ்லிம் ஆசிரியையின் அபாயா சம்பந்தமான வழக்கு சமாதானமாக முடிவுக்கு வந்திருப்பது வரவேற்புக்குரியதாக இருந்தாலும் நீதிமன்றம் மூலமே இதற்கு முடிவு காணப்பட்டது என்பது தமிழ், முஸ்லிம் உறவுக்கு கிடைத்த அவமானமாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.**

**நாம் அறிந்த வரை சுமந்திரன் எம்.பி. சட்டத்தரணியாக சறுக்கிய, தோற்ற விடயம் முஸ்லிம் பெண்களின் அபாயாவில்தான் எனவும் அது தெரிவித்துள்ளது. இது பற்றி கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீட் மௌலவி தெரிவித்திருப்பதாவது:**

கடந்த நல்லாட்சி அரசில் மேற்படி சண்முகா வித்தியாலய ஆசிரியை தனது கலாசார ஆடையான அபாயா அணிந்து செல்வதற்கு தடை விதிக்கப்பட்டார். அப்பொழுது இது விடயத்தை அரசியல் ரீதியாக வென்று தருவோம் என அன்றைய அரசின் பங்காளியான திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபும் முஸ்லிம் காங்கிரஸின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் சொல்லியிருந்தனர். ஆனால் அவர்களால் ஆசிரியைக்கு இடமாற்றம் கொடுக்க முயற்சிக்கப்பட்டதே தவிர இது விடயத்தில் நீதி பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

ஆசிரியையை இடம் மாற்றுவது இதற்கு தீர்வல்ல என்றும் கலாசார ஆடை அணிவதற்குள்ள சட்டத்தை அமுல் படுத்தவேண்



டும் என நாம் கட்சி என்ற வகையில் கூறினோம்.

மேற்படி அபாயா பிரச்னையில் அன்று அமைச்சராக இருந்த மனோ கணேசனும் இனவாதமாக, அபாயாவுக்கெதிராக பேசினார்.

பின்னர் மு. காவினர் இந்த ஆசிரியை அழைத்துக்கொண்டு போய் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை காண வைத்தபோது வழமை போல் விட்டேனா பார் நிச்சயம் தீர்வு என அந்த ஆசிரியை அவரும் ஏமாற்றியது மட்டுமே முடிந்தது.

ஆனாலும் மேற்படி ஆசிரியையின் தொடர் போராட்டமும் இளம் சட்டத்தரணிகளின் அர்ப்பணிப்பின் காரணமாகவும் நமது நாட்டின் நீதித்துறையின் நீதி காரணமாகவும் இவ்வழக்கில் வெற்றி கிடைத்துள்ளது.

இந்த வழக்கில் சண்முகா தரப்பில் ஆஜரான சுமதிரன் எம்.பி இந்த வழக்கில் தன் தரப்புக்கு வெற்றி கிடைக்காது என்பதை புரிந்து அபாயாவுக்கு சார்பாக சமாதானத்துக்கு வந்துள்ளார்.

உண்மையில் அபாயா பிரச்னையை வைத்து இரு சமூகங்களுக்குமிடையில் பிரச்னை உருவாகக்கூடாது என சுமந்திரன் உளப்பூர்வமாக நினைத்திருந்தால் வழக்கின் ஆரம்பத்திலேயே இதனை சுமுகமாக முடித்திருக்கலாம். நாம் அறிந்த வரை சுமந்திரன் எம்.பி. சட்டத்தரணியாக சறுக்கிய, தோற்ற விடயம் முஸ்லிம் பெண்களின் அபாயாவில்தான்-என்றார். (அ-06)

# சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு இனி அபாயா ஆடை அணியலாம்!

## நல்லிணக்கத்தின் சமிக்ஞை என்கிறார் இம்ரான் எம்.பி

திருமலை, மே 26

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு எதிர்காலத்தில் அபாயா ஆடை தொடர்பில் எவ்வித பிரச்னைகளையும் ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் கூறி நல்லெண்ண அடிப்படையில் வழக்குகளை இணக்கமாக முடித்துக்கொள்ள விரும்புவதாக சண்முகா வித்தியாலயத்தின் அதிபர் தரப்பானது நீதிமன்றில் முன்மொழிந்தமை மகிழ்ச்சியளிப்பதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இவ்விடயமானது தமிழ் பேசும் மக்களிடையே நல்லதொரு நல்லிணக்கத்துக்கான சமிஞ்சையாக தென்படுவதாகவும் இரு தரப்பாரும் விட்டுக்கொடுப்போடும் இணங்கியும் செல்வதன் மூலம் பலம் பெற முடியும் என்றும் இம்ரான் எம்.பி. தெரிவித்தார்.

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு தனது கலாசார ஆடையான அபாயாவை அணிந்து கொண்டு கடமையேற்கச் சென்ற ஆசிரியை பஹ்மிதா றமீஸை கடமையேற்க விடாமல் தடுத்ததமை தொடர்பில் பாடசாலை அதிபர் திருமதி. லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது விடயமாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கருத்து வெளியிடுகையில்-

கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் தமிழ், முஸ்லிம், சிங்களும் வாழ்கின்றனர். இங்கு, பல் சமய கலாசாரம் பின்பற்றப்படுகின்றது. எனவே, வெவ்வேறு இன அடையாளத்தை கொண்டவர்களாக இருந்தாலும் சரி, வெவ்வேறு சமயத்தை பின்பற்றினாலும் சரி, நமக்கிடையே புரிந்துணர்வும் சகிப்புத் தன்மையும் காணப்பட வேண்டும்.

திருமலை சண்முகா அபாயா விவகாரத்தில் ஆரம்பத்திலேயே பேசி தீர்மானமொன்றிக்கு வந்திருக்கலாம். துரதிர்ஷ்டமான சில நடவடிக்கைகள் பல கசப்பான அனுபவங்களைத் தந்துவிட்டது. மீண்டும், மீண்டும் இவற்றை பேசிக்கொண்டிருப்பதை விடுத்து, நாம் இணக்கமாக அடுத்த கட்டத்துக்கு செல்வது பற்றி சிந்திக்க வேண்டும்.

அத்தோடு, ஆசிரியை பஹ்மிதா தமது உரிமைக்காக நீண்ட நாட்கள் போராடினார். அவரை பாராட்டாமல் இருக்க முடியாது. அத்தோடு, இவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்-என்றார். (அ)

# சாய்ந்தமருதில் மார்க்க ஒன்றுகூடல்

காரைதீவு, மே 26

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் தஃவா குழு ஏற்பாடு செய்துள்ள "மாபெரும் மார்க்க ஒன்று கூடல்" இன்று வெள்ளிக்கிழமை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம் பெறவுள்ளது.

"குழந்தை வளர்ப்பும் இஸ்லாமிய வழிகாட்டலும்" எனும் தலைப்பில் அஷ்ஷெய்க் ஏ.சி. தஸ்தீக் (ஹாமி, மதனி) மற்றும் "இஸ்லாமிய கலாசாரத்துக்கு எதிரான இன்றைய அனாச்சாரம்" எனும் தலைப்பில் அஷ் ஷெய்க் எஸ்.எல். நிக்ராஸ் (தவ் ஹீதி) ஆகியோர் நிகழ்வில் விசேட சொற்பொழிவாற்றவுள்ளனர். (அ)

# சூழல் பாதுகாப்பு குறித்து திருமலையில் விழிப்புணர்வு

திருமலை, மே 26



பிளாஸ்ரிக் முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு, திருகோணமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நேற்று முன் தினம் நடைபெற் றது.

இந்த கருத்தரங்கு, லயோலா சுற்றுச்சூழல் மற்றும் நீதி மையத்தின் பணிப்பாளர் வண. டாக்டர் தியரி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்துரைத்த லயோலா சுற்றுச்சூழல் மற்றும் நீதி மையத்தின் பணிப்பாளர், "பிளாஸ்ரிக் என்பது எம் வாழ்வோடு இணைந்துவிட்டது. சில, பல காரணங்களால் அவையை தவிர்க்க முடியாது. என்றாலும், நாம் பிளாஸ்டிக் பாவனையை குறைப்பது மற்றும் அதனை சரியான முறையில் பயன்படுத்துவது மூலம் கட்டுப்படுத்த முடியும்.

திருகோணமலை நகரில் அதிகமாக பிளாஸ்ரிக் கழிவுகள் ஆழ்கடல், கரையோரப் பகுதிகள் மற்றும் நிலப்பகுதிகளில் காணப்படுகிறது. எமது நகர கடல் பகுதியில் உள்ள கழிவுகளில் 90 சதவீதம் பிளாஸ்ரிக் கழிவுகளே உள்ளது. அவை காலப்போக்கில் சிதைவடைந்து மீனுக்கு இரையாக மாறுகிறது. அந்த மீனை நாம் உண்கிறோம்.

நாம் பிளாஸ்டிக் அரிசி மற்றும் முட்டை எனக் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால், உண்மையில் நாம் பிளாஸ்ரிக் மீன்களை உண்பது எமக்கு தெரியாமலே நடக்கின்றது.

எமது நகரம் சுற்றுலா தளமாக இருப்பதும் பிளாஸ்ரிக் கழிவுகள் அதிகமாக வீசப்பட ஒரு காரணமாக உள்ளது. என்றாலும், நாம் இதனை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கையாள வேண்டும் -என்றார். (அ)

# மக்கள் காங்கிரஸ் செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீட் காலமானார்



நிந்தவூர், மே 26

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் சட்ட முதுமாணி வை. எல்.எஸ்.ஹமீட் நேற்று வியாழன் அதிகாலை தனது 61 ஆவது வயதில் காலமானார்.

கல்முனையை பிறப்பிடமாகக் கொண்ட வை.எல்.எஸ். ஹமீட், கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுகவீனமுற்று, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணித்துள்ளார். மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான இவர் முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் காதர் முகைதீனின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கடமையாற்றி வந்த நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் 1989ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதில் இருந்து அவரது பிரத்தியேக செயலாளராகவும் 1994 ஆம் ஆண்டு அமைச்சுப் பதவியை பொறுபேற்றத்தில் இருந்து அவரது இணைப்புச் செயலாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

இவர் 2001 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினராகவும் பிரதிச் செயலாளர் நாயகமாகவும் பதவி வகித்திருந்தார்.

பின்னர் அக்கட்சியில் இருந்து விலகி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சியை ஸ்தாபித்து, றிஷாத் பதியுதீன் தலைமையில் அக்கட்சியின் செயலாளர் நாயகமாக செயற்பட்டு வந்தார்.

வர்த்தக, வாணிப, கைத்தொழில், அமைச்சின் ஆலோசகராகவும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம், அசோக் லேலண்ட் நிறுவனம் என்பவற்றின் தலைவராகவும் பதவிகளை வகித்திருக்கிறார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற பொதுத் தேர்தல்களிலும் போட்டியிட்டுள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தொடர்பாக ஆழ்ந்த அறிவு மிக்கவராக திகழ்ந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்தியவர் கைது

காரைதீவு, மே 26

மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்திச் சென்ற இளைஞனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் சூட்சுமமாக எடுத்துச் செல்லப்பட்ட கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கையின் போது பெரிய நீலாவணை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் உட்பட கடத்திச் செல்லப்பட்ட 20,000 மில்லி லீற்றர் கசிப்பு உள்ளிட்டவைகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த சந்தேக நபர் பிரதான வீதியில் உள்ள பெரிய கல்லாறு பகுதியில் அமைந்துள்ள விசேட சோதனைச் சாவடியில் வைத்து கைதானார். (அ)

மேற்கத்தேய விமர்சனங்களை மீறி

# இரு புதிய ஒப்பந்தங்களில் ரஷ்யா- சீனா கைச்சாத்து!

பீஜிங், மே 26

வர்த்தகம் மற்றும் விளையாட்டு ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்களில் ரஷ்யா மற்றும் சீன அதிகாரிகள் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் ரஷ்யா மற்றும் சீனாவின் உறவுகளை முன்னெப்போதும் இல்லாத உயரத்திற்கு கொண்டு செல்வதாக ரஷ்ய பிரதமர் மைக்கல் மிஷூஸ்டின் கூறினார்.

பீஜிங்கில் சீனப் பிரதமர் லீ கியாங்குடன் நேற்று முன் தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது ரஷ்ய பிரதமர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மொஸ்கோவின் படைகள் உக்ரைனை ஆக்கிரமித்ததிலிருந்து பீஜிங்கிற்கு



விஜயம் செய்த மிக உயர் ரஷ்ய அதிகாரி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த மோதல் காரணமாக மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் அதிகரித்துள்ள நிலையில் ரஷ்யா, சீனாவின் ஆதரவை எதிர்நோக்கியுள்ளது.

(அ)

# கரீபியன் கடலில் நிலநடுக்கம்

நியூயோர்க், மே 26

பனாமா- கொலம்பியா எல்லைக்கு சற்று அப்பால் கரீபியன் கடலில் நேற்று முன் தினம் இரவு 6.6 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகளில் ஏதேனும் சேதங்கள் ஏற்பட்டதா என்பது குறித்து உடனடி தகவல் தெரியவரவில்லை.

இந்த நிலநடுக்கம் பனாமாவின் போர்டோ ஒபால்டியாவிலிருந்து வடகிழக்கே 41 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் 10 கிலோமீற்றர் (6 மைல்) ஆழத்தில் ஏற்பட்டுள்ளதுடன், அதனால் ஏற்பட்ட அதிர்வு சுமார் 10 நிமிடங்களுக்குப் பிறகு 4.9 மெக்னிடியூட் அளவில் உணரப்பட்டுள்ளது.

பனாமாவின் தலைநகரின் சில பகுதிகளில் நில நடுக்கம் உணரப்பட்டது. ஆனால் சில இடங்களில் உணரப்படவில்லை. கொலம்பிய நகரங்களான மெடலின் மற்றும் காலியில் வசிப்பவர்களும் நில நடுக்கத்தை உணர்ந்ததாக அந்த நாடுகளின் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சீனாவில் மீண்டும் உயரும் கோவிட்!

பீஜிங், மே 26

சீனாவில் கோவிட் வைரஸின் ஒமிக்ரோன் வகையின் பரவல் காரணமாக எதிர்வரும் ஜூன் மாதம் இறுதி வாரத்தில் 65 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என புளூம்பேர்க் செய்தி தெரிவித்துள்ளது.

சீனாவின் மூத்த சுகாதார அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, எதிர்வரும் ஜூன் மாத இறுதி வாரத்திற்குள், நாட்டில் 65 மில்லியன் புதிய கொவிட் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகுவார்கள் என குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த மாதத்தின் கடைசி வாரத்தில் சீனாவில் புதிய கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை 40 மில்லியனைத் தாண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் , சீனாவில் கோவிட் நோயை பூச்சியமாக்குவதற்கான கொள்கையை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்த 6 மாதங்களுக்குள் மீண்டும் சீனாவில் கோவிட் தொற்றுநோய் பரவுவதால் நாட்டின் தொற்றுநோயியல் நோய் தடுப்பு மையம் கடுமையான சிக்கலில் இருப்பதாக குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)



# டொலர் பற்றாக்குறை காரணமாக இக்கட்டு நிலையில் பங்களாதேஷ்!

டாக்கா, மே 26

டொலர் பற்றாக்குறை காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளுக்கு பணம் செலுத்த முடியாமல் இக்கட்டான நிலைக்கு பங்களாதேஷ் தள்ளப்பட்டுள்ளது.

ஆறு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 300 மில்லியன் டொலருக்கு மேற்பட்ட பணத்தை செலுத்தவேண்டிய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிலுவைத் தொகைகளை செலுத்திடுவதில் தாமதம் ஏற்பட்டதால் குறைவான எரிபொருளை அல்லது விநியோகத்தை நிறுத்துவதாக சில நிறுவங்கள் அச்சுறுத்தியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எரிசக்தி இறக்குமதியை பெரிதும் நம்பியிருக்கும் பங்களாதேஷ், அதன் ஏற்றுமதி சார்ந்த ஆடைத் தொழிலை மோசமாகப் பாதித்த எரிபொருள் பற்றாக்குறையின் விளைவாக மின்வெட்டுகளை எதிர்கொள்கிறது.

இந்நிலையில் இந்தியாவிற்கு செலுத்த வேண்டிய பணத்தை ரூபாயில் செலுத்த அனுமதிக்க வேண்டும் என உள்நாட்டு வங்கிகள் அரசாங்கத்திடம் கோரிக்கையும் விடுத்துள்ளன.



அந்நியச் செலாவணி பற்றாக்குறை மற்றும் டொலர்களுக்கான தேவையை மத்திய வங்கி பூர்த்தி செய்யாததால், இறக்குமதிக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்த முடியாத நிலை வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவின் மோதல் காரணமாக பங்களாதேஷின் அந்நியச் செலாவணி 30.18 பில்லியனாக உள்ளது. இது ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிக மோசமான நிலை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# இங்கிலாந்து மாணவர் வீஸா மீது இறுக்கமான பல கட்டுப்பாடுகள்!

## குடியேற்றத்தைத் தடுக்க புதிய விதிகள் அறிவிப்பு

லண்டன், மே 26

**இங்கிலாந்தில் வெளிநாட்டு மாணவர் தொடர்பான வீஸா வழங்குவதில் இறுக்கமான பல கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வரவுள்ளன. நாட்டில் குடியேற்றத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டுவருகின்ற கடுமையான திட்டங்களின் ஒரு பகுதியாகவே மாணவர் வீஸா மீதும் கடும் போக்கைக் கடைப்பிடிக்க ரிஷி சுனாக்கின் அரசு தீர்மானித்துள்ளது.**

மாணவர் வீஸா தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு, வெளிநாட்டு மாணவர்கள் தங்கள் குடும்பத்தவர்களை அழைத்து அவர்களோடு இணைந்து கொள்வதை பெருமளவில் கட்டுப்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் வெளிநாட்டு மாணவர்கள் தங்களது கல்வியை நிறைவு செய்வதற்கு முன்பாகவே மாணவர் வீஸாவைத் தொழில் வீஸாவாக மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகளும் விரைவில் நிறுத்தப்படவுள்ளன. நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறிகளை அனுப்பிவைப்பதற்கான ஒரு பயண வழியாக மாணவர் வீஸாவைப் பயன்படுத்துகின்ற சர்வதேச முகவர்களை இது கட்டுப்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் வீஸாவின் கீழ் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைகின்ற வாய்ப்பைக் குறைப்பதன் மூலம் நாட்டுக்குள் வருகின்ற குடியேறிகளின் நிகர எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்க புதிய விதிகள் உதவும் என்று அரசு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வரவுள்ள இந்தக் கட்டுப்பாடு பட்டப்படிப்புக்குப் பிந்திய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கின்ற வெளிநாட்டு மாணவர்களுக்குப் பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும்



இணைந்து கல்வி கற்பதற்காக ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மாணவர் வீஸா வசதிகளைப் பயன்படுத்தி நாட்டுக்குள் வருகின்றனர். இங்கிலாந்தில் குடியேற விரும்புபவர்களும் மாணவர் வீஸா வசதியைப் பயன்படுத்தி அங்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு மட்டும் வெளிநாட்டு மாணவர் நிலையில் உள்ள ஒரு லட்சத்து 36 ஆயிரம் பேருக்கு வீஸா வழங்கப்பட்டிருப்பது அந்த நாட்டின் குடிவரவு - குடியகல்வுப் பிரிவின் பதிவுகளில் தெரியவந்துள்ளது. 2019 இல் இந்த எண்ணிக்கை வெறும் 19 ஆயிரமாகவே இருந்துள்ளது.




ஐ. பி. எல். தொடர்:

## இறுதிக்கான தகுதி சுற்று -2இல் மும்பை - குஜராத் இன்று மோதல்

அகமதாபாத், மே 26

ஐ. பி. எல். தொடரின் இறுதி போட்டிக்கு தகுதி பெறுவதற்கான போட்டியில் இன்று மும்பை இந்தியன்ஸ் குஜராத் ரைட்டன்ஸ் அணிகள் மோதுகின்றன.

வெளியேற்றும் போட்டியில் 81 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மும்பை அணி லக்னோவை வெளியேற்றியது. முன்னதாக, இறுதிக்கான தகுதி சுற்று போட்டி 1இல் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிடம் குஜராத் ரைட்டன்ஸ் அணி 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்த இரு அணிகளும் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு அகமதாபாத் மைதானத்தில் மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் மோதும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இறுதிப் போட்டியில் மும்பை வேண்டாம்!

### சென்னை அணியின் பயிற்றுநர்

சென்னை, மே 26

நடப்பு ஐ. பி. எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. மும்பை இந்தியன்ஸ் அணி இறுதிக்கான தகுதி சுற்ற போட்டி 2இல் விளையாடுகிறது. இந்நிலையில், இறுதிப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வேண்டாம் என்று வேடிக்கையாக தெரிவித்துள்ளார் சென்னை அணியின் பந்துவீச்சு பயிற்றுநர் பிராவோ.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "சென்னை சுப்பர் கிங்ஸ் 4 முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி 5 முறையும் ஐ. பி. எல். கிரிக்கெட்டில் சம்பியன் பட்டம் வென்றுள்ளன. இரு அணிகளும் ஐ. பி. எல். இறுதிப் போட்டியில் முறையே 2010, 2013, 2015, 2019 தொடர்களில் விளையாடி உள்ளன. அதில் சென்னை ஒரு முறையும், மும்பை மூன்று முறையும் வாகை சூடியுள்ளன.

"இது எனது தனிப்பட்ட ரீதியான உணர்வு. இறுதிப் போட்டியில் எங்களுடன் விளையாடும் அணியாக மும்பை இந்தியன்ஸ் இருக்க வேண்டாம் என நான் கருதுகிறேன். (சிரிக்கிறார்) என் நண்பர் பொலார்ட் அதை அறிவார். இறுதிப் போட்டிக்கான பந்தயத்தில் உள்ள அணிகளுக்கு எனது வாழ்த்துகள். நாங்கள் எதிர்கொள்ள உள்ள அந்த அணியை ஆவலுடன் எதிர்பார்த்து காத்துள்ளேன். அதற்கான பந்தயத்தில் உள்ள அணிகள் தரமான மற்றும் எதிரணிக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய அணிகள் என்பதையும் அறிவேன்" - என்று வேடிக்கையாக கூறியுள்ளார்.

# இறுதிக்கான தகுதி போட்டி- 2இற்கு முன்னேறியது மும்பை இந்தியன்ஸ்



சென்னை, மே 26

ஐ. பி. எல். 20 கிரிக்கெட் தொடரின் வெளியேற்றும் போட்டியில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியை 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது 5 முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ்.

இதன் மூலம் அந்த அணி இறுதிக்கு முந்தைய தகுதி சுற்று - 02 போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் நேற்று முன்தினம் நடந்த வெளியேற்றும் போட்டியில் மும்பை - லக்னோ அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர்களான அணித் தலைவர் ரோஹித் சர்மா 11, இஷான் கிஷன் 15 ஓட்டங்களில் வெளியேறினர்.

3ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய சூர்யகுமார் யாதவ், கமரூன் கிறீனுடன் இணைந்து அதிரடியாக விளையாடினார். இதனால், ஓவருக்கு 10 ஓட்டங்களுக்கு மேல் கிடைத்து வந்தது. 10.1ஆவது ஓவரில் மும்பை அணி 100 ஓட்டங்களை எட்டியது. ஓட்டங்களை வேட்டையாடிய இந்த இணையை நவீன் உல் ஹக் பிரித்தார்.

கமரூன் கிறீன் 23 பந்துகளில், ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் நவீன் உல்ஹக் பந்தில் போல்ட் ஆனார். சூர்யகுமார் யாதவ் 20 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கௌதம் கிருஷ்ணப்பாவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

இதன் பின்னர், திலக் வர்மா 26, ரிம் டேவிட் 13 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர். முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டமிழந்ததால் இம்பேக்ட் பிளேயர் விதியின் கீழ் களமிறக்கப்பட்ட நேஹல் வதேரா 12 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 23 ஓட்டங்கள் விளாசினார். இதனால் இறுதிப் பகுதியில் ஓட்டம் கணிசமாக உயர்ந்தது. கிறிஸ் ஜோர்டான் 4 ஓட்டங்களில் மோஹ்சின் கான் பந்தில் நடையை கட்டினார்.

லக்னோ அணி தரப்பில் வேகப் பந்து வீச்சாளர்களான நவீன் உல் ஹக் 4, யாஷ் தாகூர் 3, மோஹ்சின் கான் ஒரு விக்கெட் கைப்பற்றினர். சுழல்பந்து வீச்சாளர்களான குர்ணல் பாண்ட்யா, ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா 4 ஓவர்களை வீசி கூட்டாக 68 ஓட்டங்களை தாரை வார்த்த நிலையில் விக்கெட் ஏதும் கைப்பற்றவில்லை. கிருஷ்ணப்பா கௌதம் ஓர் ஓவர் வீசி 8 ஓட்டங்களை வழங்கினார்.

183 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. பிரேரக் மன்கட் 3, கைல் மேயர்ஸ் 18, குர்ணல் பாண்ட்யா 8, ஆயுஷ் பதோனி 1, நிக்கோலஸ் பூரன் 0 ஓட்டங்களில் நடையை கட்டினர்.

10 ஓவர்களில் லக்னோ அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 75 ஓட்டங்கள் எடுத்தது. சீராக ஓட்டங்கள் சேர்த்த மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 27 பந்துகளில், ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரிம் டேவிட், இஷான் கிஷன் கூட்டணியால் ரன் அவுட் செய்யப்பட்டார். இது ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது.

தொடர்ந்து கிருஷ்ணப்பா கௌதம் 2, தீபக் ஹூடா 15 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார்கள். ரவி பிஷ்னோய் ஓர் ஓட்டத்துடன் ஆகாஷ் மத்வால் பந்தில் போல்ட் ஆனார். கடைசி வீரராக மோஹ்சின் கான் ஓட்டம் ஏதும் எடுக்காமல் மத்வால் பந்தில் வெளியேற லக்னோ அணி 16.3 ஓவர்களில் 101 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

மும்பை அணி தரப்பில் ஆகாஷ் மத்வால் 3.2 ஓவர்களை வீசி வெறும் 5 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வேட்டையாடினார்.

கிறிஸ் ஜோர்டான், பியூஸ் சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர். (ஐ)

# லா லிகா உதைபந்தாட்டம் பார்சிலோனா தோல்வி!

பார்சிலோனா, மே 26

ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா உதைபந்தாட்ட போட்டியில் முடிசூடிக் கொண்ட பார்சிலோனா 1-3 கோல் கணக்கில் வல்லாடோலிடிடம் தோல்வி கண்டது.

ஏற்கெனவே சம்பியனாகிவிட்ட பார்சிலோனாவுக்கு இந்தத் தோல்வியால் எந்த பாதிப்பும் இல்லை. என்றாலும், தொடர்ந்து 5 தோல்விகளுடன் 'ரெலிகேஷன்' நிலையில் இருந்த வல்லாடோலிட் தற்போது 3 புள்ளிகள் முன்னிலையுடன் 17ஆவது இடத்தில் நிற்கிறது. 35 புள்ளிகளுடன் 18ஆவது இடத்தில் இருக்கும் கெடாபி அடுத்த ஆட்டத்தில் ரியல் பெட்டிஸூடன் தோல்வி காணும் பட்சத்தில் வல்லாடோலிட் தப்பிப் பிழைக்கும்.

முன்னதாக இந்த ஆட்டத்தில் வல்லாடோலிடுக்காக சைல் லாரின் (22ஆவது நிமிடம்), கொன்ஸாலோ பிளாடா (73) ஆகியோர் கோலடிக்க, பார்சிலோனாவின் அண்ட்ரியாஸ் கிறிஸ்டென்சன் தவறுதலாக 'ஓன் கோல்' (2') ஒன்றும் அடித்தார். இறுதியில் பார்சிலோனாவுக்காக நட்சத்திர வீரர் ரோபேர்ட் லெவண்டோவ்ஸ்கி (84') கோல் அடித்தனர். (ஐ)



# வடக்கு மாகாணத்தில் நிலவும் குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வு

கொழும்பு, மே 26

வடக்கு மாகாணத்தில் நிலவும் குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வை வழங்குவதற்கு தன்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளும் நிச்சயம் வழங்கப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், அமைச்சர் ஜீவன் தொண்டமானை நேற்று முன் தினம் சந்தித்து பேச்சு நடத்தினார்.

கொழும்பில் உள்ள அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது, வடக்கு மாகாணத்தில் குடிதண்ணீர் பிரச்னையை எதிர்கொண்டுள்ள கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு குடிதண்ணீரை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். வடக்கின் தற்போதைய நிலைவரம் பற்றியும் அவர் அமைச்சருக்கு தெளிவுபடுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்த விடயங்களை கேட்டறிந்துகொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், விரைவில் வடக்கு பகுதிக்கு நேரில் வருவதாகவும், மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க தன்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் அமைச்சர்களாக இருந்தபோது வடக்குக்கு ஆற்றிய சேவைகளை இதன்போது நினைவு கூர்ந்த அங்கஜன், ஜீவன் தொண்டமானும் சிறப்பாக செயற்படுகிறார் என நேரில் பாராட்டு தெரிவித்தார்.

(அ)



# செக் குடியரசின் தூதுவர் இ.தொ.கவினருடன் பேச்சு

கொழும்பு, மே 26

செக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் ஹெலிஸ்கா ஷிகோவா இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவினருடன் நேற்று முன் தினம் சிநேகபூர்வ கலந்துரையாடலை நடத்தினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைக் காரியாலயமான சௌமிய பவனில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன் மற்றும் இ.தொ.காவின் உயர்மட்ட உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மலையகம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் பொருளாதார மேம்பாடு குறித்து பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

(அ)

# சமூகப் பிரச்னைகளைத் தீர்க்க வடக்கில் புதிய வேலைத்திட்டம்

## ஆளுநர் சார்ள்ஸ் ஆரம்பித்தார்

யாழ்ப்பாணம், மே 26

**வடக்கு மாகாணத்தில் காணப்படும் பல்வேறு சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண புதிய வேலைத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை, ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆரம்பித்துள்ளார்.**



வடக்கு மாகாணத்தில் ஆளுநர் பதவியை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்ற பின்னர் தமது முதல் பணியாக அவர் இந்த வேலைத்திட்டத்தை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளார்.

கடந்த 22ஆம் திகதி காலை 9.30 மணிக்கு உத்தியோகபூர்வமாக தமது பணிகளைப் பொறுப்பேற்ற ஆளுநர் சார்ள்ஸ், அன்றைய தினம் மதியமே தெரிவு செய்யப்பட்ட ஒரு சில அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போது வடக்கு மாகாணத்தில் காணப்படும் சமூகச் சீர்கேடுகள் தொடர்பாக அவரது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து, இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு, ஒழுக்க விழுமியம் கொண்ட சமுதாயத்தை வடக்கு மாகாணத்தில் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடலை தமது முதலாவது பணியாக கடந்த செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் அவர் நடத்தினார்.

கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், மருத்துவர்கள், யாழ்-கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் ஆகியோர் சகிதம் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, யாழ் மாவட்டத்தில் 2021 முதல் இன்று வரையிலான சமூகவிரோதச் செயல்கள், வன்முறைகள், பாலியல் பலாத்காரம், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பாவனை, கொள்ளை, களவு, வீதி விபத்துக்கள் தொடர்பான புள்ளிவிபர ரீதியான தகவல்களுடன் சமூக மட்டத்தில் காணப்பட்டுவரும் சீர்கேடுகளை விளக்கிய யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத், இளையோர் மத்தியிலேயே இவ்வாறான பிரச்னைகள் பரவலாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலான குடும்பங்களில் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையில் அன்பு, பாசம் கொண்ட இறுக்கமான பிணைப்புக் காணப்படாமை இதற்கான காரணங்களில் ஒன்று என்பதை பெரும்பாலான சம்பவங்கள் தொடர்பாக தாம் நடத்திய ஆய்வின் மூலம் கண்டறிந்திருப்பதாகவும் இதன்போது அவர் எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இதுபற்றி கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்களிடம் ஆளுநர் விளக்கம் கேட்டதுடன், நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் வினவினார்.

கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு மட்டத்தில் இது தொடர்பாக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆளுநருக்கு விளக்கியதுடன், எனினும், இந்த நடவடிக்கைகளின் போதாமையை ஏற்றுக்கொண்டனர்.

குறிப்பாக இள வயதிலேயே பிள்ளைகளின் மனோநிலை, மெல்லக் கற்கும் பிள்ளைகள், வழமைக்கு மாறான நடத்தைகள் கொண்டவர்கள் போன்றோரை முற்கூட்டியே சரியாக இனங்கண்டு, அவர்களுக்கான சிகிச்சை மற்றும் வழிகாட்டலை குழந்தைகள்நல வைத்தியர்கள் ஊடாக சிறுவர் உளநலப் பிரிவின் கவனத்துக்குக் கொண்டுவருவதன் மூலம் வளர்ந்த பின்னர் அவர்கள் பிறழ்வான செயற்பாடுகளின் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தலாம் என யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த உளநலப் பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கலைச்செல்வி சுட்டிக்காட்டினார்.

யாழ் மாவட்டச் செயலக மட்டத்தில் இவ்வாறான பிரச்னைகளுக்குத் தீர்வகாணும் வகையில் விசேட குழு ஒன்று உருவாக்கப்பட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இதன்போது தகவல் வெளியிட்ட மாவட்ட செயலாளர் சிவபாலசுந்தரம், பிள்ளைகள் பெற்றோர், உற்றார், உறவினர் நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுவதையும், மத அனுட்டானங்கள், அறநெறி வகுப்புக்களில் பங்கேற்பதை உறுதிப்படுத்தவும் என ஞாயிற்றுக்கிழமைகளில் க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தர வகுப்புக்கள் தவிர்ந்த ஏனைய கீழ் வகுப்புக்களுக்கான தனியார் வகுப்புக்களுக்கு விடுமுறை விடும் நடைமுறை ஒன்றை தாம் அறிமுகப்படுத் தவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இவற்றை ஏற்றுக்கொண்ட ஆளுநர் சார்ள்ஸ், பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் திருமணத்துக்கு முன்னரே திருமண பந்தம், குடும்ப வாழ்வு, குழந்தை வளர்ப்பு என்பன தொடர்பாக பயிற்சிகளும், வழிகாட்டல்களும் வழங்கும் நடைமுறை காணப்படுவதாகவும், இது போன்ற ஒன்று இலங்கையில் இல்லாதிருப்பது பல பிரச்னைகளுக்குக் காரணமாகிறது என்று சொன்னார். எனவே, பெற்றோரை மையப்படுத்தியதாக வழிகாட்டல் செயலமர்வுகள், பயிற்சிகளை வழங்குவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

(அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# அளம்பில் துயிலும் இல்ல காணியை இராணுவத்தினர் சுவீகரிக்க முயற்சி

## அளவீட்டு பணி மக்களால் தடுத்து நிறுத்தம்

முல்லைத்தீவு, மே 26

**முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை, இலங்கை இராணுவத்தின் 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரித்து வழங்க எடுக்கப்பட்ட முயற்சி அப் பகுதி மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது.**

குறிப்பாக நில அளவைத் திணைக் களத்தினர் மற்றும், கரைதுறைப் பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியை அளவீடு செய்ய வருகை தந்திருந்தனர்.

இந் நிலையில் மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதிமக்கள் மற்றும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும் குறித்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அத்தோடு குறித்த காணியை அளவீடு செய்து இராணுவத்துக்காக சுவீகரிக்கும் நடவடிக்கையை அனுமதிக்கமுடியாதென அப்பகுதி மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும், அங்கு வருகை தந்த நில அளவைத்திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துயன், மாவீரர்களின் பெற்றோர்கள், கிராம மக்கள் ஆகியோர் இணைந்து ஈடுபட்டனர். (அ)





# ஜப்பான் பிரதமரை சந்தித்தார் ரணில்!

ரோக்கியோ, மே 26

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்நாட்டின் பிரதமர் புமியோ கிஷிடாவை நேற்று ரோக்கியோவில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார்.

இதன்போது, இடம்பெற்ற இரு தரப்பு பேச்சுவார்த்தையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஜப்பான் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை, புதிதாக தொடங்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையை செப்ரெம்பர் அல்லது நவம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்ய முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பேச்சுவார்த்தைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் கூறினார்.

மேலும், ஜப்பானின் முன்னாள் பிரதமர் யசுவோ புகுடாவையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, ஜப்பான்-இலங்கை சங்கம் மற்றும் முன்னாள் பிரதமர் புகுடா இணைந்து ரோக்கியோவில் நடத்திய காலை உணவு சந்திப்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# கொழும்பு-காங்கேசன்துறை ரயில் சேவையை ஜூலை 15 ஆம் திகதிக்குள் ஆரம்பிக்க திட்டம்

கொழும்பு, மே 26

கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கான ரயில் சேவை மீண்டும் ஜூலை 15 ஆம் திகதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளது. ரயில் பாதை திருத்தப் பணிகள் காரணமாக தற்போது வடக்கு ரயில் சேவைகள் கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை மட்டுமே இடம்பெறுகின்றன.

இந்நிலையில், அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரையான ரயில் பாதையின் திருத்தப் பணிகளை அடுத்த மாதம் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை மீண்டும் ரயில் சேவையை ஜூலை 15 ஆம் திகதிக்குள் ஆரம்பிக்க முடியும் என மஹவ - ஓமந்தை ரயில்வே திட்ட பணிப்பாளர் அசோக முனசிங்க தெரிவித்தார். (அ)

# மீண்டும் பிரதமர் பதவி பெற படாதபாடு படுகிறார் மகிந்த!

கொழும்பு, மே 26

"மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவியைப் பெற படாதபாடு படுகின்றார். இது வெட்கக்கேடு."

-இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்கள் அதிகாரம் இல்லாத ஒரு குழு இப்போது நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள அந்த அதிகாரத்தைப் பிரித்து எடுப்பதில் அந்தக் கட்சிக்குள் போட்டி நிலவுகின்றது.

மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதியே ரணில் விக்கிரமசிங்க. பாராளுமன்றத்துக்கும் மக்கள் ஆணை இல்லை.

மொட்டுத் தலைவரான மகிந்தவை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு மொட்டுக் கட்சியில் சிலர் இப்போது ரணிலுடன் இணைந்து வேலை செய்கின்றனர். அது அதிகாரத்தைப் பகிர்ந்து எடுப்பதற்காகவே.

சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களும் ரணிலுடன் இணையும் நிலை ஏற்பட்டுள்ளது. அதுவும் பதவிக்காகவே.

இப்போது மகிந்த பிரதமராகப் போகின்றார் என்று கதை அடிபடுகின்றது. அது நடக்காது என்று சொல்ல முடியாது. இவர்கள் எல்லோரும் அடிபடுவது மக்களுக்காக அல்ல. மக்களுக்குச் சேவை செய்வதற்காக அல்ல. பதவிக்காக மட்டும் தான். மகிந்தவும் மீண்டும் பிரதமர் பதவியைப் பெறவே படாதபாடு படுகின்றார். இது வெட்கக்கேடு - என்றார். (அ)

# மதுபானம் விலை குறையாது

கொழும்பு, மே 26

மதுபானத்தின் விலையை குறைப்பது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என நிதிய மைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மதுபானத்தின் விலை குறையும் என சமூக வலைத்தளங்களில் பரவி வரும் வதந்திகளில் உண்மையில்லை என நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் கலால் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால், இலக்கு உற்பத்தி வருமானம் 30 சதவீதம் குறையும். வழமையான மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நுகர்வோர் சட்டவிரோத போதைப்பொருளை நாடுவதாகவும், இதனால் அரசாங்கத்தின் வருமானம் குறைவடைந்து மக்களின் ஆரோக்கியம் சீர்குலைந்து வருவதாகவும் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ)

# மூன்று பல்கலைகளுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, மே 26

இலங்கையில் உள்ள மூன்று பல்கலைக்கழகங்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக துணைவேந்தர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு, களனி, சிறிஜயவர்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களுக்கே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகங்களில் போதைப்பொருள் பாவனை மற்றும் மாணவிகளுக்கு பாதுகாப்பு இன்மை என்பன அதிகரித்துள்ளதால் இந்த பாதுகாப்பு அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அரிசி, மா, சீனி என்பன விலை குறையவில்லை

கொழும்பு, மே 26

பல அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த விற்பனை விலை குறைந்துள்ளபோதிலும், அந்த உணவுகளின் சில்லறை விலை குறையாததால், நுகர்வோர் அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்கவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நெல் விலை குறைந்தாலும், சந்தையில் ஒரு கிலோ அரிசி 180 ரூபா தொடக்கம் 220 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

அரிசி ஆலைகளில் நெல் அரிசி கிலோ 170 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

போக்குவரத்துக் கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணம் அதிகரிப்பால் அரிசி விலையும் உயர்ந்துள்ளதாக சில்லறை விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலை குறைந்துள்ளதுடன், ஒரு கிலோ சீனியின் மொத்த விலை 232 ரூபாவாகும். ஒரு கிலோ பருப்பின் மொத்த விலை 315 ரூபாவாகும்.

எனினும், சில்லறை விற்பனைச் சந்தையில் வெள்ளைச் சீனி 240 முதல் 250 ரூபாவாகவும், சிவப்புச் சீனி 370 ரூபாவாகவும், கோதுமை மா 230 ரூபாவாகவும், பருப்பு 330 முதல் 340 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.